ஸங்கீத
டிசம்பர் – 2024

ஸரிகமபதநி

இசை – நாட்டிய மாத இதழ்
ரூ.30/-
மலர் – 29 – இதழ் – 2

சுநாதத்தை விரும்பும்
சுஸானா

chennai fine arts

(இசையும் பணியும் எங்கள் தவமே)

Ph.: 9444076899, e-mail: chitravina@gmail.com

Annual Music Festival 2024

Conferring the title "Digvijaya Nādavāni" & presenting the

***Gōtuvādyam Nārāyana Iyengār International Award for Excellence** to*

Padmashri Awardee, Kalaimamani Thiru **A K C Natarajan**

***Pudukottai Sri Dakshinamurthy Pillai Award to* Thiru H S Sudhindra**

Award instituted by
Vidwan Trichy K Murali

Laya Puraskar to
Thiru B S Purushotham

Award instituted by
Vidwan B Shree Sundarkumar

At the Inauguration Function - Saturday, 21.12.2024, 10.30 a.m. @

Srinivasa Sastri Hall, Luz-Mylapore, Chennai 600004

Eleven-day festival from 21st to 31st December 2024
for detailed schedule visit *www.chennaifinearts.in*

ALL ARE WELCOME – ENTRY FREE

ஸரிகமபதநி

இசை – நாட்டிய மாத இதழ்

மலர் - 29 இதழ் - 2

தலைமைப் புரவலர்
பத்மஸ்ரீ. டாக்டர்.
நல்லி குப்புசாமி செட்டியார்

முதன்மை ஆசிரியர்
நாராயணவிஸ்வநாத் (RITES)

ஆசிரியர்
கலைமாமணி **ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்**

துணை ஆசிரியர்கள்
சங்கர் வெங்கட்ராமன்
சிம்மம்குமார்
ஏவி. ஆர். வர்மா

வடிவமைப்பு
சி.ஜி.சுரேஷ்

அச்சிடுபவர்
டி.வேல்முருகன்,
நியூ சித்ரா பிரஸ்
32, ஜீவரத்தினம் சாலை,
சென்னை-600081.

நிர்வாக அலுவலகம்
AD-48, முதல் தெரு, அண்ணாநகர்,
சென்னை - 600040.

ஸரிகமபதநி பவுண்டேஷனுக்காக
வெளியிடுபவர்
இராம. பாஸ்கர்

Contact : 86670 03627 (MSG)
Web: www.sarigamapadani.in
E-mail - sangeethasarigamapadani@gmail.com

Our Sponsors
Nalli Chinnasamy Chetty
Chennai - 600 017.

ஸரிகமபதநி வாழ்த்துகிறது!

நமது மகத்தான டிசம்பர் இசை விழாவினை முன்னிட்டு பூமிப் பந்தின் பல்வேறு நாடுகளில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தின் பிற மாவட்டங்களிலிருந்தும் சென்னையில் முகாமிட்டு உள்ள அனைத்து கலை உள்ளங்களுக்கும் ஸரிகமபதநியின் வாழ்த்துக்கள்...

நமது பாரம்பரியக் கலைகளை வளர்த்தெடுக்கும் பணியில் தொண்டாற்றி வரும் பல்வேறு சபாக்களில் இந்த ஆண்டிற்கான சிறப்பு விருதுகளை - பட்டங்களை - கௌரவங்களைப் பெறும் பல்வேறு கலை வடிவங்களின் முன்னணிக் கலைஞர்களுக்கும் ஸரிகமபதநி ஆசிரியர் குழுவின் சார்பில் நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்...

அண்மையில், சென்னை ஆர்.ஆர்.சபாவிற்கு 'அழையா விருந்தாளியாக'ச் சென்று ஒரு அற்புத நிகழ்ச்சியினை அதிர்ஷ்டவசமாகக் காண நேர்ந்தது. அரங்கின் நுழைவு வாயிலில் நம் கண்களில் பட்ட 'அரங்கேற்றம்' என்கிற வாசகத்திற்கும் உள்ளே மேடையினை முழுமையாக ஆக்ரமித்து நர்த்தனம் புரிந்தவருக்கும் கொஞ்சமும் தொடர்பே இல்லாமல் இருந்தது.

அந்த நர்த்தகியின் பெயர் சுஸானா. போலந்து நாட்டு நங்கையாம். பார்வையாளராகச் சென்றிருந்த நாம் சுஸானாவின் பரிணமிப்பால் கவரப்பட்டு பத்திரிகையாளராக மாற வேண்டிய அவசியம் நேர்ந்தது.

சுஸானா, சென்னை, நந்தனத்தில் இயங்கிவரும் 'சைலசுதா நாட்டிய அகாடமியில்' பயிலும் பல அந்நிய தேசத்து மாணவிகளில் ஒருவர். இவருக்கு இளம் வயதிலிருந்து கலைகளின் மீது அதிக நாட்டம் ஏற்பட்டு பள்ளி மாணவியாக பல பங்களிப்புகளை தனது தாயகத்தில் செய்துள்ளார். போலந்து நாட்டினை பூர்வ தேசமாகக் கொண்டிருந்த போதிலும் இந்தியக் கலைகளும் - கலாசாரமும் - இசையும் இவரை வெகுவாகக் கவர்ந்து இருக்கின்றன.

சுஸானாவிடமே பேசினோம்...

"இந்திய இசை என்றாலே எங்கள் நாட்டவருக்கு பாலிவுட் பாடல்கள்தான் பரிச்சயம். அப்படி இந்தி, மராத்தி பாடல்களை மொழி புரியாவிடிலும் அவற்றின் ரிதம் உண்டாக்கும் உணர்வுகளுக்காக கேட்டு ரசிப்போம். இப்படி கேட்கையில் ஒரு குறிப்பிட்ட வகைப் பாடல்கள் ஏனோ என்னை கூடுதலாக பாதித்தன. என்னையும் அறியாமலே அவற்றை பலமுறை முணுக்க முணுக்க ஆரம்பித்தேன். அவை இராக அடிப்படையில் அமைந்த பரதக்கலை சார்ந்த நாட்டியப் பாடல்கள் என்பது தெரியவந்தது. ஒலி வடிவில் கேட்ட அப்பாடல்களை தேடிப்பிடித்து ஒளி வடிவிலும் காணும்போது நாட்டிய மணிகளின் ஆடை - ஆபரணங்களும், கை -

கால் அசைவுகளும், முக பாவங்களும், பரவசமூட்டும் நளினங்களும் இக்கலை மீதான ஈர்ப்பினை எனக்குள் ஏற்படுத்தின.

ஆனால், இந்தியக் கலாசாரத்திற்கும், மொழிக்கும், பண்பாட்டிற்கும் அப்பாற்பட்ட நம்மால் இக்கலையினை கற்க முடியுமா அப்படியே கற்றாலும் ஒரு கலைஞராக மிளிர முடியுமா என்கிற ஐயம் ஏற்பட்டது. அப்போதுதான் அமெரிக்க வம்சாவளியினைச் சேர்ந்த சோஃபியா சலேன்கரோஸ் என்பவர் இதே பரதக் கலையில் சோபிப்பதை காண நேர்ந்தது. இவரால் முடிந்தது நம்மால் ஏன் முடியாது என எண்ணினேன்.

போலந்தில் உள்ள தமிழ்ச் சங்கம் மூலம் பரதக் கலை பயிற்சியாளர்களைத் தேடினேன். எங்கள் நாட்டில் மூன்று பேர் இப் பயிற்சியினை தருவதாக அறிந்தேன். அவர்களில் அக்னிஷ்கா கபெல்கோ என்பவரை குருவாகக் கொண்டேன். அப்பள்ளியில் இந்திய மாணவர்கள் எவரும் இல்லை. மேலும், போலந்தில் உள்ள தமிழர்கள் நடத்தும் தீபாவளி, பொங்கல் போன்ற விழாக்களில் பரதத்திற்கும் வாய்ப்பு தரப்படும். அது ஒரு சில நிமிடங்களுக்கே அரங்கேறும். பெரும்பாலும் திரை இசைப் பாடல்களுக்கான நடனங்களுக்குத்தான் முக்கியத்துவம் தரப்படும்.

எனது குருவான அக்னிஷ்கா கபெல்கோ தமிழகத்தில் உள்ள கலைமாமணி சைலஜா குருவிடம் பயிற்சி பெற்றவர். இக்கலை மீதான எனது ஆர்வத்தினை மேலும் செம்மைப்படுத்த ஆன்லைன் வகுப்புகள் வழியாக சைலசுதா அகாடெமியின் குருவாகிய சைலஜாவிடம் தொடக்கப் பயிற்சியினைப் பெற்றேன். பின்னர் வாய்ப்பு கிடைக்கும் போது அவ்வப்போது சென்னை வந்து தங்கி நேரடிப் பயிற்சியும் பெற்றேன்.

என்னைப் போன்ற வெளிதேசத்து மாணவிகள் விரும்பி பரதம் பயின்றாலும் ‘எனக்கும் தெரியும்’ என்கிற நிலையில் சுருங்கி வெளியேறி விடுவார்கள். அவர்களில் நானும் ஒருவராக இல்லாமல் இக்கலையில் நாட்டியக் கலைஞராக மிளிர வேண்டும் என விரும்பினேன். அரங்கேற்றம் வரை நிகழ்த்தி விட்டுத்தான் நாடு திரும்புவது என்கிற சங்கல்பத்துடன் இம்முறை தமிழகம் வந்தேன்.

ஆறுமாத காலமாக இங்கேயே தங்கி தூங்கும் நேரம் தவிர மனதாலும் - உடலாலும் பரதக் கலையுடனே வாழ்ந்தேன். குரு மட்டுமின்றி எனது சக மாணவ மாணவிகளும் கூட அவ்வப்போது எனக்குப் பயிற்சியாளராக இருந்து வழிகாட்டி உள்ளனர். எனது விருப்பத்தை தெரிந்து என் குடும்பத்தாரும் உறுதுணையாக அமைந்து உதவி புரிந்ததால் என்னால் அரங்கேற்றம் வரை வந்து நிறைவு செய்துள்ளேன்.

பரதக் கலையில் பல பாணிகள் இருந்த போதிலும் எனக்கு வழுவூர் பாணி

ஏற்புடையதாக அமைந்தது. நாட்டிய மணிகளான டெல்லி கீதா சந்திரன் மற்றும் அனிதா ரத்னம் ஆகியோரது நிகழ்வுகள் எனக்கு மிகப் பிடித்தமானவை. அதுபோல் இந்திய வாத்தியங்களில் மிருதங்கத்தின் சுநாதம் கேட்கப் பிடிக்கும். இந்தியக் கலைகள் எல்லாமுமே கூடுதல் அர்ப்பணிப்பு தேவைப்படுபவையாக உள்ளதை என்னால் உணர முடிந்தது” என்றார் சுஸானா.

சுஸானாவின் அரங்கேற்றத்தில் பங்கு பெற்று வாழ்த்திய முன்னணி பரதக் கலைஞர்கள் அனைவருமே அவருக்கு இந்தளவு பயிற்சி அளித்த குரு சைலஜாவை போற்றிப் பாராட்டினர். அது நியாயமான பாராட்டும் கூட..

குரு சைலஜாவுடன்...

தன் மாணவியைப் பற்றி குரு சைலஜா குறிப்பிடும் போது...

“எனது பெருமைக்குரிய மாணவிகளில் சுஸானாவும் ஒருவர். எனது சைலசுதா அகாடமியில் ஜப்பான், தைவான், ரஷ்யா உள்ளிட்ட பல நாட்டு மாணவிகள் பரதம் மற்றும் குச்சிப்புடியில் பயிற்சி பெற்று வருகின்றனர். இக்கலைகளின் நுணுக்கங்களை நமது மண்ணைச் சேர்ந்தவர்களுக்கு எளிதில் விளங்கிடச் செய்ய முடியும். அதுவே அந்நிய தேசத்தவர்களுக்கு கூடுதல் உழைப்பும், பொறுமையும், சகிப்புத் தன்மையும் தேவைப்படும். இவர்களுக்கு குருவாக இருந்து சொல்லித் தருவதை விட தோழியாக இருந்து பயிற்சி அளிப்பதுதான் பலனளிக்கும்.

சுஸானா எனது பெருமைக்குரிய வெளிதேச மாணவி என்று சொன்னதற்கு காரணம்; என்னிடம் பயின்ற வெளிநாட்டு மாணவிகளில் அரங்கேற்றம் வரை தன்னை தயார்படுத்தி வந்திருப்பவர் இவர் ஒருவர்தான். ‘ஆர்வமும், உழைப்பும் இருந்தால் நம்மாலும் முடியும்’ என சக வெளி தேசத்து மாணவிகளுக்கு முன்னுதாரணமாக மாறி இருக்கிறார் சுஸானா” என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார் குரு சைலஜா.

– ஏ.வி.ஆர்.வர்மா

காலம் வேறு கருத்தொன்று

பக்தி மார்க்கத்தைப் பண்படுத்தியவர்கள் மாணிக்கவாசகர் - ஆதிசங்கரர். இருவரும் வாழ்ந்த காலமும் - வாழ்ந்த இடங்களும் வெவ்வேறு. முன்னவர் தமிழகத்தில் பிறந்தவர். இரண்டாமவர் கேரளத்தில் ஜனித்தவர்.

இப்படி மாறுபட்ட இருவேறு சூழ்நிலைகளில் இருந்த போதிலும் இருவரும் ஒரே கருத்தினைப் பாடி உள்ளனர்.

அதுவும் வரிக்கு வரி; வார்த்தைக்கு வார்த்தை எனும் போது வியப்பு மேலிடுகிறது. ஆதிசங்கரர் ஸமஸ்கிருதத்தில் பாடியுள்ளார். மாணிக்கவாசகர் தமிழில் பாடி உள்ளார்.

திருத்தோணாக்கம்

(திருவாசகம் – மாணிக்கவாசகர்)

நிலநீர் நெருப்புயிர்

நீள் விசும்பு நிலாப் பகலோன்

புலனாய மைந்தனோ

டெண் வகையாய்ப் புணர்ந்து நின்றா

னுலகே ழெனத் திசை

பத்தெனத்தா னொருவனுமே

பலவாகி நின்றவா

தோணாக்க மாடாமோ

தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்

(ஆதி சங்கரர்)

பூரம்பாஸ்ய நலோ

நிலோம் பரமஹர்

நாதோ ஹிமாம்சு;

புமான்

இத்யாபாதி

சராசரத் மகமிதம்

யஸ்யைவ மூர்த்யஷ்டகம்

நான்யத் கிஞ்சன

வித்யதே விம்ருசதாம்

யஸ்மாத் பரஸ்மாத் வி போ;

இவையே அவ்விரு பாடல்கள்.

தியாகராஜரும், முத்துஸ்வாமி தீக்ஷிதரும், சியாமா சாஸ்திரிகளும் தத்தமது பாடல்களை இன்றைய வித்வான்கள் போல் சங்கதிகள் போட்டு, தங்களது வித்வத்தை வெளிப்படுத்தி, ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற நிச்சயமாக பாடி இருக்க மாட்டார்கள்.

முழுவதும் பக்திப் பரவசத்தில் உணர்ச்சிகளின் உந்துதனால் வந்து விழுந்த வார்த்தைச் சரங்கள் அவை. இயற்கையாக அமைந்த ராகத்தில் சேர்க்கப்பட்ட வர்ண மெட்டுகள்.

இப்படி வெவ்வேறு இசைப் புலவர்களால் இயற்றப்பட்ட போதிலும் அவை ஏறக்குறைய ஒரே வடிவத்தில் அமைந்துள்ளது வியப்பிற்குரியதுதானே! உதாரணங்கள் சில:

மனஸு ஸ்வாதீன – சங்கராபரணம் – அக்ஷயலிங்கவிபோ

ஹிமாத்ரி ஸுதே – கல்யாணி – பிரானவரா லிச்சி

ஸீதம்ம மாயம்ம – வஸந்தா – ராமச்சந்த்ரம் பாவயாமி

என்னகானு ராமபஜன – பந்துவராளி – நின்னருள் இயம்ப.

– டி.எஸ்.டி.ராயன்



தீபத் திருநாள்

தமிழகத்தில் சிறப்பாக பழங்காலம் தொட்டு கொண்டாடப்படும் பண்டிகை தீபத் திருநாள். கார்த்திகைத் திருநாள் என கொண்டாடப்பட்டு வரும் இவ்விழா தமிழகத்தில் மட்டுமின்றி நம்மை ஒட்டியுள்ள ஆந்திரம், கேரள, கர்நாடக மாநிலங்களிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதற்கான சான்றுகள் பல சங்க நூற்களிலே உண்டு. ஆதியில் நாட்கள் கார்த்திகை முதலாகக் கணக் கிடப்பட்டதால் இதனை ‘தலைநாள்’ என்றும் சிறப்பிப்பர்.

பதினெண் கீழ்க் கணக்கு நூல்களான கார் நாற்பது மற்றும் களவழி நாற்பது ஆகிய நூல்களில் கார்த்திகைத் திருநாள் குறித்து கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, தேவாரத்திலும் சீவக சிந்தாமணியிலும், பரி பாடலிலும், அகநானூற்றிலும், சிலப்பதிகாரத்திலும் கூட கார்த்திகைப் பெருநாள் குறிப்புகள் இடம் பெற்று இருப்பதால் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் கார்த்திகை தீபத் திருநாள் கொண்டாடப் பட்டிருப்பது உறுதியாகிறது.

இந்நாளினை சைவர்கள் போற்றிடக் **காரணம், காமியம், விசயம்** என்பதாகிய மூன்று சிவாகமங்களும் போற்றிடத் தவறவில்லை.

கார்த்திகைத் திங்களில் வரும் வளர் பிறையில் கார்த்திகை நாளில் ஆலயங் களிலும், வீடுகளிலும் மாலைப் பொழுதில் விளக்கிட்டு திருமகள் எழுந்தருளும்படி மங்கள தீபத்தை ஏற்றி வழிபடுதல் மக்களது நம்பிக்கையாக உள்ளது.

கார்த்திகை மாதத்தின் ஒவ்வொரு நாளும் ஏற்றப்படும் விளக்கு வெவ்வேறு விதமான பலாபலன்களை அளிக்கக் கூடியதாக புராணங்கள் கூறுகின்றன. சில சமூகங்களில் திருமணமாகிச் சென்ற பெண்கள் தீபத் திருநாளன்று தாய் வீடு வந்து தங்கள் பிறந்தகம் லட்சுமி கடாட்சம் பெற்றிட விளக்கேற்றிச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தமிழகத்தின் நாங்குநேரி, திருக்குறுங்குடி, ஆழ்வார்திருநகரி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஊர்களில் இன்றைக்கும் இது நடைமுறையில் உள்ளது.

விளங்கச் செய்வதே விளக்கு என்பர் ஆன்மநேயர்கள். அகல், எண்ணெய், திரி, தீபம் ஆகியன நமது உடலையும், அதனைப் பயன்படுத்தும் விதத்தையும் வெளிப்படுத்து வதாக பெரியோர்கள் கூறுகின்றனர். அதற்காகத்தான் பழைய வீடுகளில் வீட்டுத் திண்ணையின் இருபுறமும் அகல் விளக்கு அன்றாடம் ஏற்றப்படுவதற்கென்றே மாடங்கள் அமைத்துள்ளனர்.

கார்த்திகைத் திங்கள் கங்காதர மூர்த்திக்கு மிகக் களிப்பான மாதமாகும். கார்த்திகை மாதத்தில் வரும் சோமவிரதங்கள் மிகப் புனித நாட்களாகப் போற்றப்படுகின்றன. சோமவாரங் களில் மேற்கொள்ளப்படும் விரதங்களும், பூஜை களும், ஆண்டு முழுமையும் அவற்றைச் செய்த பயனை நல்கும் என்பது பெரியோர் கூற்று.

மனித குலம் முதன் முதலாக வழிபட்டது ஒளி வெள்ளத்தைதான். ஆதி கால மனிதன் காடுகளில் வாழ்ந்து வந்த போது திடீர் திடீரென நாலாபுறமும் காடுகள் தானாக தீப்பற்றி எரியும். அப்போது அவன் செய்வதறியாது திகைத்து தீயை வழிபடத் துவங்கினான். அன்று அவன் பயத்தால் தீக்கு தந்த முக்கியத்துவத்தை இன்றைய நாகரிக சமுதாய மனிதனும் தனது பட்டறிவால் ஒளிக்கே கூடுதல் முக்கியத்துவம் அளிக்கிறான்.

காரணம், இறைவன் என்றாலும், இயற்கை என்றாலும் இரு தரப்புமே சூரியனைத்தான் மிகச் சிறந்த படைப்பாக கூறுகின்றனர். பஞ்ச பூதங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படும் அக்னி வழிபாடு பல சமயங்களில் வெவ்வேறு வடிவத்தில் பின்பற்றப்படுகிறது. ஒளி வழிபாடுதான் பிற்காலத்தில் தீப வழிபாடாக மாறி இருக்க வேண்டும் என கூறுவோரும் உண்டு.

சிவன் கோவில்களில் தீப நாச்சியார் இருப்பது போல வைணவக் கோயில்களில் 'தீபப் பிரகாசர்' எனப்படும் விளக்கொளிப் பெருமாள் என்றொரு தெய்வம் வணங்கப்படுகிறது. கார்த்திகை தீபத்திருநாளின் மகத்துவத்தை உணர்த்த பற்பல புராணக் கதைகளும், செவி வழிச் செய்திகளும் புழக்கத்தில் உள்ளது.

கார்த்திகை தீபம் என்றதுமே நம் எல்லோரது நினைவிற்கும் வருவது பஞ்ச பூதத் தலங்களில் ஒன்றான திருவண்ணாமலைதான். திருவாரூரில் பிறந்தால் முக்தி; திருவண்ணாமலையை நினைத் தாலே முக்தி என துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடியுள்ளார். சைவ சமயக் குரவர்களால் புகழ்ந்து பாடப்பட்ட திருவண்ணாமலையின் தேயுலிங்கத்தை தேஜோலிங்கம், ஜோதிர்லிங்கம், சோணாசலம், ஸோணகிரி, அருணகிரி என்றெல்லாம் கூறுவர்.

சுவாமியின் பெயர் அருணாசலேசுவரர். அம்மையின் பெயர் உண்ணாமுலை அம்மை.

இத்தலத்தை, சிவபெருமான் வல்லாள மகாராசனுக்கு மகவாய்த் தோன்றி அனுக்கிரகித்த தெய்வத் திருத்தலம் என்பர். பார்வதி தேவியார் பல்லாண்டு தவங்கிடந்து சிவபெருமானுடைய இடப்பாகம் பெற்ற இடம் என்றும் கூறுவர். இப்புராண வரலாறு 'பவளக் குன்று' என வழங்கும் குன்றின் மேலுள்ள கோயிலில் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

இம் மலையை வலம் வர எட்டுக் கல்தூரம்

நடக்க வேண்டும். இங்கு அகஸ்தியர் சைவம் கற்றார் என்று கூறப்படுகிறது. கௌதமர் பவளக் குன்றில் தவஞ் செய்தார் என்றும் சொல்லப்படுகிறது.

இத்தலம்தான் இறைவன் எங்கும் நிறைந்தவன். அவன் விண்ணிற்கும், மண்ணிற்கும் அப்பாற்பட்டவன்! பிரபஞ்சம் அனைத்திலும் நிறைந்து நிற்பவன். அவனுக்கு அடியும் இல்லை. முடியும் இல்லை. அவன் சோதிமயமானவன். அவனுக்கு உருவமும் இல்லை அருவமும் இல்லை என்று முடிவு கட்டிய தலம். இது மக்கள் கட்டிய முடிவல்ல. தேவாதி தேவர்கள் கட்டிய முடிவு. இதற்குப் பண்டு தொட்டுத் தமிழ் நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளும் ஒரு நல்ல புராணக் கதையும் உண்டு.

தேவர்களில் பெரியவர்களான நான்முகனுக்கும் திருமாலுக்கும், நான் பெரியவனா? நீ பெரியவனா? என்பதில் ஒரு பெரிய போட்டி ஏற்பட்டுவிட்டது. இருவரும் இந்த வாதத்தைத் தீர்த்து வைக்கச் சிவபெருமானிடம் சென்றனர்.

அவர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் இருவரும் கேட்கவில்லை.

இறுதியாக அவர் ஒரு போட்டி ஏற்படுத்தி போட்டியில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்களே பெரியவர் என்று தீர்மானிக்கலாம் என்று கூறினார். இருவரும் இசைந்தார்கள்.

சிவபெருமான் விண்ணிற்கும் மண்ணிற்கும், அப்பால் ஓங்கி நிற்கும் ஓர் லிங்க வடிவாக, அனல் பிழம்பாக உருவெடுக்கிறார்.

இந்த அபூர்வ உருவின் அடியையும் முடியையும் யார் முதலில் கண்டு வருகிறார்களோ அவர்களே பெரியவர் என்ற போட்டிப் பந்தயத்தின் முடிவை விவரித்தார் சிவபெருமான்.

உடனே திருமால் வராக உருவில் சிவபெருமானின் அடியைக் காண அவசரமாகப் புறப்பட்டார். அவர் அதல பாதாளங்களையும் துளைத்துக் கீழ்நோக்கிச் சென்று கொண்டே இருக்கிறார்.

நான்முகனோ அன்னத்தின் வடிவு கொண்டு முடி காண விண்ணில் பறந்து கொண்டே இருக்கிறார். பல்லாண்டுகள் சென்றும் அவர்கள் இருவராலும் முடியையோ, அடியையோ காண முடியவில்லை.

திருமால் சலித்துப் போனார். சிவபெருமானிடம் திரும்பி வந்து தனது தோல்வியை ஒப்புக்கொண்டார். பிரமனோ தன் தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. ஏதாவது குறுக்கு வழியில் வெற்றி காண நினைத்தார். ஒன்றும் புலப்பட வில்லை. அப்பொழுது விண்ணிலிருந்து ஓர் தாழம்பூ தலைகீழாக கீழே வந்தது.

பிரமன் அதை நோக்கித் ‘தாழம்பூவே! நீ எங்கிருந்து வருகிறாய்?’ என்று கேட்டார். உடனே தாழம்பூ நான் இறைவன் திருமுடியிலிருந்து வருகிறேன். அதனின்று நான் நழுவிக் கற்பகோடி காலங்கள் ஆகிவிட்டன என்று கூறிற்று.

உடனே பிரமதேவன் அப்பூவைச் சரிக்கட்டித் தன்னை இறைவன் திருமுடி யிலிருந்து நான்முகனே எடுத்து வருவதாகப் பொய்ச் சாட்சியம் சொல்லச் செய்துவிட்டார்.

இவர்கள் சொல்வது முழுப்பொய் என்று இறைவனுக்குத் தெரியாதா? உடனே இறைவன் இவர்களின் பொய்க்கூற்றை அம்பலப்படுத்திப் பொய்ச் சாட்சியம் சொல்லச் செய்த பிரமனைப் பூலோகத்தில் ஒரு சாதாரண மனிதனாகப் பிறக்கும்படி சபிக்கிறார். பொய் சாட்சி கூறிய தாழம்பூவைத் தம்முடைய பூசைக்கு உரியதல்ல என்று விலக்குகிறார்.

தம் தோல்வியை ஏற்று மெய் புகன்ற திருமாலை வாழ்த்தி அவருக்குத் தம் அடியையும் முடியையும் காட்டுகிறார். அதற்காக இங்கே அழல் உருவில் இருந்த இறைவன் மலையுருவில் மாறுகிறார்.

விண்ணிற்கும் மண்ணிற்கும் அப்பால் எல்லையற்று அனல் பிழம்பாக ஓங்கி நின்ற இறைவன் நம் கண்ணிற்கு எட்டும் அளவில் அண்ணாமலையாக அரனுக்குக் காட்டியறிவித்து நிற்கிறார்.

இக்கதை, இறைவன் எல்லையற்றவன். தேவாதி தேவர்களாலும் அவன் உருவைக் காணமுடியாது. செருக்கு நிறைந்த உள்ளமுடையோர் இறைவன் முடியையோ அடியையோ எவ்வளவு முயன்றாலும் காண முடியாது. ஆனால், கர்வம் ஒழிந்தவர்கள் பக்தி கொண்டு நினைத்தால் அரை வினாடியில் அவன் **உருவைக் காண முடியும் என்பதைப் புலப்படுத்துகிறது இக்கதை.**

கார்த்திகைத் தீபக் காட்சி :

திருவண்ணாமலையில் கார்த்திகைத் தீபதரிசனம் ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகை ஓரையில் நிறைமதி நாள். இலட்சக்கணக்கான மக்கள் நகரின் சகல தெருக்களிலும், வீடுகளின் மாடியிலும், கோயில் பிரகாரத்திலும் கூடி இருப்பார்கள்.

பகலவன் மறைந்து முழுமதி வானில் அரும்பிக் கோபுர உச்சியைத் தொட வருவது போல் வரும்.

கோயிலிருந்து பஞ்ச மூர்த்திகளும் எழுந்தருளுவார்கள். அதிர்வெடி செவியைத் துளைப்பது போல் வெடிக்கும்.

உடனே அர்ச்சகர்கள் ஐந்து கற்பூர ஆரத்தித் தட்டுகளை உயர்த்துவார்கள். அப்பொழுது அண்ணாமலையின் உச்சியிலுள்ள உயர்ந்த கற்பூரக்

கொப்பரையிலிருந்து சுடர் எழும். ‘அண்ணாமலைக்கு அரோகரா’ என்ற ஒலி விண்முட்ட எங்கும் ஒலிக்கும்.

பக்தர்களின் முகத்தில் புன்னகை பொழிகிறது; உள்ளம் பூரிக்கிறது; உடல் புல்லரிக்கிறது. பொங்கழல் உருவனைக் கண்டு களிப்புறுகின்றார்கள்.

இந்த அற்புதமான காட்சியைக் கண்டு சம்பந்தர்,

“உண்ணாமுலை

உமையாளொடும்

அடனாகிய ஒருவன்

பெண்ணாகிய பெருமான்மலை

திருமாமணி திகழ

மண் ஆர்ந்தன..............

மழலைமுடிவு - அதிரும்

அண்ணாமலை தொழுவார் வினை

வழுவா வணம் அறுமே”

என்று உள்ளம் உருகிப் பாடியுள்ளார். இன்றும் அப்பாடலை ஆயிரம் ஆயிரம் அன்பர்கள் அன்பு நெக்குருகி ஆனந்தக் கண்ணீர் பொங்கப் பாடி உள்ளம் கனிந்து நிற்கின்றனர்.

திருக்கோயில் :

திருவண்ணாமலையிலுள்ள அருணாசலேசுவரர் சுமார் இருபத்தாறு ஏக்கர் நிலம் உள்ள விசாலமான இடத்தில் கோயில் கொண்டுள்ளார்.

கோயிலின் நீளம் கீழ் மேல் 1500 அடி. அகலம் தென்வடல் 700 அடி ஒன்றுக்குள் ஒன்றாக நான்கு பிரகாரங்கள் இருக்கின்றன.

கோயிலைச் சுற்றி நல்ல உயரமான அழகான திரு மதில்கள் காணப்படுகின்றன. இம் மதிற்சுவர்கள் கருங்கற்களை ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கி

வைத்து இடையே சந்துகள் இல்லாமல் செதுக்கி இணைத்துப் பொருத்தப்பட்டிருக்கிறது. இதனைச் சிற்பசாஸ்திரத்தில் ‘சுத்தம்’ என்று கூறுவர்.

நாற்புறமும் நான்கு கோபுரங்களும் உள்ளே மூன்று பிரகாரங்களும் உண்டு.

இக்கோயில் ஏனைய தமிழ்நாட்டுக் கோயில்களைப் போல் திராவிட சிற்ப முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கே பிரதான வாயிலில் உள்ள ராஜ கோபுரத்தைக் கிருஷ்ணதேவராயர் கோபுரம் என்பர்.

இக்கோபுரமானது மிக அழகுடையதாகவும் 217 அடி உயரமும், 135 அடி அகலமும் உள்ளது.

இங்குள்ள இருபக்கத்துச் சுவர்களிலும் பரத சாஸ்திரத்தில் கூறும் நூற்றெட்டுக் கரணங்களையும் விளக்கும் சிற்ப வடிவங்கள் உள்ளன.

தெற்கே உள்ள கோபுரம் திருமஞ்சனக் கோபுரம் என்றும், மேற்கேயுள்ள கோபுரம் மாயக்கோபுரம் என்றும், வடக்கேயுள்ள கோபுரம் அம்மணி அம்மாள் கோபுரம் என்றும் கூறப்படுகின்றன.

இங்கு பிரகாரத்தில் கிருஷ்ணதேவராயர் கட்டிய ஆயிரங்கால் மண்டபம் இருக்கிறது. இதில் சிற்ப வேலைப்பாடுகள் அற்புதமாக இருக்கின்றன.

இங்கு ஒரு கல்வெட்டுக் காணப்படுகிறது. அது கிருஷ்ண தேவராயர் ஒரிய மன்னனையும், ராயச்சூர் மன்னனையும் வெற்றி கொண்டதையும், துலாபாரம் செய்து தம் எடையுள்ள பொன்னைக் கோயிலுக்கு அளித்ததையும் ‘ஜீரணோத்தார தசகம்’ என்னும் திருக்கோயில்களைப் பழுது பார்க்கும் பாரிய நூல் ஒன்றை வாமதேவர் இங்கு இயற்றியதையும் குறிப்பிடுகிறது. முன்னே நிற்கிற தூணில்

கிருஷ்ணதேவராயர் சிலையும் எதிரே ஒரு தெய்வத்தின் சிலையும் காணப்படுகிறது. இதற்குத் தென்மேற்கே மூலையின் அடியில் பாதாள லிங்கமும் காணப்படுகிறது.

அடுத்தது கம்பத்து இளையனார் சந்நிதி. இது 1421ஆம் ஆண்டில் கிருஷ்ண தேவராயரின் உதவியால் கட்டி முடிக்கப்பட்டது. முருகப் பெருமான், திருப்புகழ் பாடிய அருணகிரியின் பிரார்த்தனைக்கு இரங்கிக் கம்பத்தில் காட்சி அளித்தாராம். அந்தத் தூணை நடுவாக வைத்து இந்தக் கோயில் கட்டப்பட்டதாம்.

இங்கு வில்லேந்திய வேலன் மயில் மீது கம்பீரமாகக் காலையூன்றி நிற்பது கலைஞர்களுக்குப் பெரிய விருந்தாகும். தெற்கே இருப்பது வாசன் குளம். இங்கிருந்து திருமலம்ம சமுத்திரத்திற்கு வழி இருக்கிறது.

இரண்டாம் பிரகார வாயிலில் நந்தி வீற்றிருக்கிறார். வலப்புறம் முருகன் கோயிலும், இடப்புறம் சுந்தரேஸ்வரலிங்கமும் காணப்படுகின்றன.

விஜயநகர மன்னரின் சின்னங்களான வாளும், வராகமும் தீட்டப்பட்டுள்ளன.

இங்குள்ள கோபுரம் வல்லாளன் கோபுரம் என்று கூறப்படுகிறது. 1328இல் இங்குள்ள மதிலையும், கோபுரங்களையும் வல்லாளன் கட்டினானாம். இக்கோபுரங்களைப் பாண்டியரும், ஹோய்சாளரும், சோழரும் கட்டியிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இங்குள்ள குளம் பெருமாள் தடாகம் என்று கூறப்படுகிறது. இதை ஒட்டி நந்தவனமும், பெருமாள் மண்டபமும் உண்டு. அப்பால் மணிமண்டபமும் குளத்திற்கு மேற்கே சிவ பெருமான், கணபதி, விந்தேஸ்வரலிங்கம் பஞ்சமுகலிங்கம் ஆகிய நிலம், நீர், நெருப்பு உருவங்கள் உண்டு. இதற்கு நான்கு முகம் - காற்று என்றும் ஐந்தாம் முகம் ஆகாயம் என்றும் கூறப்படுகிறது.

மூன்றாம் பிரகாரத்திற்குச் சென்றால், நந்தி கிளிக் கோபுரம் ஆகியவைகள் காணப்படுகின்றன. உள்ளே புகுந்ததும் மங்கையர்க்கரசி மண்டபம் தெரிகிறது. மண்டபத்தையும், அருகேயுள்ள குளத்தையும் சேவப்ப நாயக்கன் கட்டினான் என்று அறிகிறோம்.

இந்த மண்டபத்தில் தான் கார்த்திகையன்று மலை மேல் தீபம் போடும் பொழுது சுவாமி எழுந்தருளுவார்.

இடப்புறம் ஸ்தல விருட்சமும், ஆதித்த சோழன் கல்வெட்டுக்களும் உள்ளன.

தகடூர் (தருமபுரி) அதியமான் மலையனூரை இக்கோயிற் பணிக்கு அளித்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது.

வடக்கே வல்லாளன் 11ஆம் நூற்றாண்டில் கட்டிய உண்ணாமுலை அம்மன் சந்நிதி காணப்படுகிறது.

இதன் முன் மண்டபத்தில் எட்டுத் தூண்களில் அஷ்டலட்சுமி உருவங்கள் காணப்படுகின்றன. அருகே நவக்கிரக மண்டபமும், 5 சிவாலயங்களும் உள்ளன.

நான்காம் பிரகாரத்தின் வாயிற்படியில் நந்தி, பலி பீடம், கொடிமரம் ஆகியன வரிசையாகக் காணப்படுகின்றன. ஆவுடையார் லிங்க மூர்த்தியாகக் காட்சி தருகிறார். வடக்கே பைரவர் வாயிலில் இருக்கும் நடராஜர், திருமூர்த்தி முதலிய தேவர்களின் சிற்ப வடிவங்கள் பார்க்கத்தக்கவை.

மலையின் மீது ஒரு பெரிய செம்புக் கொப்பரையில் 24 முழம் நீளமுள்ள ஒரு தூணில் ஒரு மணங்குக் கற்பூரத்தைத் தூளாக்கித் தூவித் திரியாக்கி, 20 மணங்கு நெய் ஊற்றி, ஒரு வீசைக் கற்பூரக் கட்டியை ஏற்றி நெருப்பைப் பற்ற வைப்பார்கள். இது பக்கத்திலுள்ள ஊர்களுக்கொல்லாம் 15 நாள் வரைத் தெரியுமாம்.

திருவண்ணாமலைக்குப் போய் தரிசனம் செய்யப் போகிறவர்கள் அனைவரும் தம் இல்லத்தில் வைத்து வணங்கப் பிள்ளையார் உருவம் வாங்கி வருவதுண்டு. இவைகளெல்லாம் பண்டுதொட்டு தமிழகத்தில் தீபத் திருநாள் தலைசிறந்த விழாவாகக் கொண்டாடப்பட்டு வருவதை உறுதிப்படுத்துகின்றன.

●

அடித்துக் கையாள்வது அவசியமில்லை

சங்கீத வித்வத் சபையின் ஆண்டு விழாவில் வீணைவித்வான் கே.பி.சிவானந்தம் ஆற்றிய தலைமை உரையிலிருந்து ஒரு பகுதி:-

“தானம் என்பது முக்கியமான அம்சமாகும். பாடுபவர்களும், வீணை வாசிப்பவர்களும் நல்ல முறையில் அப்யாஸம் செய்தால் கற்பனையாக ராகம் பாடுவதற்கும், நிரவல், மத்யமகாலம் பாடுவதற்கும் மிகவும் பயன்தருவதாக அமையும்.

வீணையில் தானம் வாசிக்கும் போது தாளத் தந்திகளை உபயோகப்படுத்த வேண்டிய முறையினை வியக்கத்தக்க ரீதியில் நமது முன்னோர்கள் வகுத்துள்ளார்கள்.

தாள ஸம்பிரதாயத்தில் த்வனியில் மூழ்கி மறைந்துவிடக் கூடாது. அந்த ஸ்வரங்களைப் போஷிப்பது போல தாளத் தந்திகளை மிருதுவாக உபயோகப்படுத்த வேண்டும். ராக பாவத்துடன் லக்ஷணத்திற்குக் கட்டுப்பட்டு ஸ்வரத் தொகுதிகளை தாள வரிசைக் கிரமத்தில் அமைத்து காலப்ரமாண சுத்தத்துடன் தாளம் வாசிப்பதுதான் சிறந்த முறை.

“பண்டைய காலத்தில் ராகாலாபனை கிருதி, நிரவல், தானம், பல்லவி இவைதான் பிரதானமாகப் பழக்கத்தில் இருந்தன” என்று என் தந்தை காலத்திலிருந்து மற்ற வித்வான்களும் கூறுவார்கள்.

மந்யமகால ஸ்வரம் பாடுவதற்கு ஒவ்வொரு ஸ்வரஸ்தானத்திற்கும் எழுத்தைச் சொல்லியாக வேண்டியிருப்பதால் ராக பாவத்திற்கும் - ரக்திக்கும் அடிப்படையான வளைவு குழைவுகளுக்கு இடமில்லாமல் போய்விடுகிறது. இதனால்தான் ராகாலாபனை செய்யும் போது ஏற்படும் ரக்தியும், ஸுகபாவமும் மத்யமகால ஸ்வரம் பாடும்போது

ஏற்படுவதில்லை.

சௌக காலத்தில் ஸ்வரத்தை அமைத்துப் பாடும் பொழுது ராக ரக்தியும் - ஸஞ்சார க்ரமங்களும் பாதிக்கப்படுகின்றன. விவஹாரம் என்ற பெயரில் ஸ்வரங்களை அடித்துக் கையாளும் போது, அவை ஸ்தானங்களிலிருந்து விலகி ஸ்வரத்திற்கும் - ஸ்தானத்திற்கும் சம்பந்தமில்லாத நிலை ஏற்பட்டு விடுகிறது. ராகபாவமும், ரக்தியும் கெடாமல் ஸ்வரம் பாடும் முறையினைக் கையாள்வதுதான் உசிதம் என்பது என் அபிப்பிராயம்.

இசைக்கலைப் பீடங்கள்

சங்கீதக்கலை சோபிதம் பெற்று இசைக் கலையில் சிறப்புடன் விளங்கிய இடங்களையே 'இசைக்கலைப் பீடங்கள்' என கூறுகிறோம்.

ஓர் இடம் சங்கீதப் பீடமாக வளர்ந்து பிரகாசிக்க பல்வேறு காரணங்கள் அடிப்படையாக இருக்கலாம்.

1. மகாராஜாக்கள் தங்கள் சமஸ்தானங்களில் சங்கீத மேதைகளை ஆதரித்ததால் இசைக் கலையில் சிறப்புப் பெற்று விளங்கியவை தஞ்சாவூர், எட்டயபுரம் போன்றவை.

2. சங்கீத மேதைகள், சங்கீதப் போஷகர்கள் ஆகியோர் வந்து தங்கி வாசம் செய்த காரணத்தினால் சங்கீதப்பீடமாக உருப்பெற்றவை, சென்னை போன்றவை.

3. சங்கீத மேதைகளோ, இசை உருப்படிகளை இயற்றிய வாக்கேயக்காரர்களின் ஜன்ம பூமியாகவோ திகழ்ந்து அதனால் சங்கீதப் பீடமாக வளர்ந்த திருவையாறு, பத்ராச்சலம் போன்றவை.

சரபோஜி மன்னர்

தஞ்சாவூர், சென்னை, விஜயநகரம், உடையார்பாளையம், பொப்பிலி, திருவாங்கூர், மைசூர், எட்டயபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, வெங்கட்டகிரி போன்றவை தென்னிந்தியாவில் முக்கிய சங்கீதப் பீடங்களாகக் கருதப்படுபவை.

தஞ்சாவூர் ஒரு சிறந்த சங்கீதப் பீடமாக வளர்ந்தமைக்கான முக்கியக் காரணங்கள்;-

"தென்னிந்தியாவில் மிகச் சிறந்த சங்கீதப் பீடமாகக் கருதப்படுவது தஞ்சாவூரேயாகும். தஞ்சையானது கி.பி.11-ம் நூற்றாண்டு ஆரம்பம் முதலே, அதாவது சோழ ராஜாக்கள் ஆண்ட காலம் முதற் கொண்டே ஒரு இசை மையமாக வளர்ந்து வந்துள்ளது. அப்போது இம்மண்டலத்தை ஆண்டு வந்த சோழ அரசர்களே இங்கு இசை வி(த்)தையை விதைத்தார்கள் எனலாம். மற்ற இசைப் பீடங்கள் 18, 19-ம் நூற்றாண்டுகளி லிருந்தே இசை முக்கியத்துவம் பெற்ற சங்கீதப் பீடங்களாக கருதப்படுபவை. தென்னிந்திய சங்கீதப் பீடங்களுக்குள்ளேயே கலைகளில் மிகச் செழுமை பெற்று விளங்கியது தஞ்சை மாவட்டமேயாகும். கடந்த 800 ஆண்டுகளாக தஞ்சையை ஆண்டு வந்த மன்னர்கள் சங்கீதத்தையும், நாட்டியத்தையும் ஆதரித்து வந்துள்ளனர்.

மேலும், மிகச் சிறப்புப் பெற்ற சங்கீதப் பிதாமகர்கள் பலர் இந்த மாவட்டத்திலே வாழ்ந்து இருக்கின்றனர். இசை உலகில் வழங்கி வரும் இசை உருப்படிகளுள் முக்கால் பாகத்திற்கும் மேல் தஞ்சை மாவட்டத்தில் இருந்த வாக்கேயக்காரர்களினாலேயே இயற்றப்பட்டவை. சங்கீத சாஸ்திர விற்பன்னர்களும், குரலிசையில் சிறப்புப் பெற்ற வித்வான்களும், வாத்ய வல்லுநர்களும் இங்கு வாழ்ந்து இசைத் தொண்டு ஆற்றியுள்ளனர்.

தஞ்சையில் பரதநாட்டியக் கலையும், பாகவத மேளா நாடகங்களும், கதா காலட்சேப கலையும் ஆதரிக்கப்பட்டு வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. பஜனை பத்ததி நன்கு வளர்ச்சி அடைந்து, பல்லாயிரக்கணக்கான வைதீக கான உருப்படிகளும் இந்த மாவட்டத்தில் உருப்பெற்றுள்ளன. கர்நாடக சங்கீத ராகபத்ததிக்கு ஆணி வேராகத் திகழும் 72 மேள

பத்ததியும், 24 மெட்டுகளுடன் கூடிய ‘தஞ்சாவூர் பேண்டு’ (Tanjore Band) என்னும் வாத்தியக்குழு தோன்றி வளர்ந்தது இங்கு ஆண்ட மன்னர்களின் ஆதரவினால்தான்.

சரபோஜி மகாராஜா சமஸ்தானத்தில் 360-க்கும் மேற்பட்ட சங்கீத வித்வான்கள் இருந்து அரசரின் ஆதரவைப் பெற்று இசைக்கலைக்கு மெருகூட்டி வந்துள்ளனர். சொண்டி வெங்கடசுப்பையா, சொண்டி வெங்கடரமணய்யா, ஷட்கால கோவிந்தமாரர் போன்ற இசை மேதைகள் இங்கு இருந்தனர். ஐரோப்பிய வாத்தியமாகிய வயலினை பாலுசுவாமி தீக்ஷிதர் அவர்கள் கற்று, பின்னர் அந்த வாத்யம் கர்நாடகச் சங்கீதத்திற்கு உகந்தது என அரங்கேற்றம் செய்து வைத்ததும் தஞ்சையில்தான்.

மிகப் புகழ்பெற்ற வாக்கேயக்காரர்களாகிய ஸ்ரீ தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி, பச்சிமிரியம் ஆதியப்பய்யா, இராமஸ்வாமி தீக்ஷிதர், பல்லவி கோபாலய்யர், சுப்பராய சாஸ்திரி, ராமஸ்வாமி சிவன், மஹா வைத்தியநாத அய்யர், பட்டணம் சுப்ரமண்ய அய்யர், மூவலூர் சபாபதி அய்யர், ஆனைய்யா, பல்லவி துரைசாமி அய்யர், முத்துத் தாண்டவர், மாரி முத்தாப்பிள்ளை, பாபநாச முதலியார், பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு, வேதநாயகம் பிள்ளை போன்றவர்களும்; வைதீக கான உருப்படிகளை பாடி தேவாரப் பண்களை இயற்றிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், (அப்பர்) சுந்தரர், தரங்கங்களைப் படைத்த நாராயண தீர்த்தர் போன்ற பக்தசிரோன்மணிகளும், கேய நாடகங்களையும், கேய சரித்திரங்களையும் படைத்து வழங்கிய அருணாசலக் கவிராயர் (ராம நாடகம்), கோபால கிருஷ்ண பாரதி. (நந்தனார் சரித்திரம்) போன்ற இசைத் தமிழ் வல்லுநர்களும், நருத்ய நாடகங்களை உருவாக்கிய மெலட்டூர் வெங்கட்ராம சாஸ்திரி, சங்கீதக் கிரந்த கர்த்தாக்களான கோவிந்த தீக்ஷிதர் (சங்கீத சுதா) வெங்கிடமஹி (சதுர்தண்டி பிரகாசிகை), துளஜாஜிமகாராஜா (சங்கீத சாராம்ருதம்), கோவிந் தாச்சாரியார் (சங்கிரஹசூடாமணி) ஆகியவர்களும், நயமுடன் இசைபாடி புகழ்பெற்ற பாலுஸ்வாமி தீக்ஷிதர், சின்னஸ்வாமி தீக்ஷிதர், திருக்கோடிக் காவல் கிருஷ்ணய்யர் (வயலின்), டோலக்நனுமியா, சரப சாஸ்திரி, மகாதேவ நட்டுவனார் (கிளாரினெட்), கோட்டுவாத்யம் சஹாராமராவ், மிருதங்கம் நாராயண ஸ்வாமியப்பா, நாதஸ்வரம் சிவக்கொழுந்து, செம்பனார் கோவில் ராமஸ்வாமி, மன்னார்குடி சின்னப்பக்கிரி முதலியோரும், கலையை ஆதரித்த மஹாராஜாக்க ளாகிய இராஜராஜ சோழர், விஜயராகவ நாயக்கர், ரகுநாத நாயக்கர், ஷாஜி, துளஜாஜி, சரபோஜி போன்ற

ஸ்ரீ தியாகராஜர்

மகாராஜாக்களும் இசையை வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டு இசைக்கலைஞர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வந்தனர்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆலயங் களில் குடி கொண்டிருக்கும் தெய்வங்களின் பேரில் இயற்றப்பட்டவைகளே, இசை உலகத்தின் பெரும்பான்மையான உருப்படிகளாக விளங்குகின்றன. தஞ்சை மாவட்டத்தில் ஸ்ரீ தர்மஸம்வர்த்தினி ஸமேத பஞ்சநதீஸ்வரரும், வைத்தீஸ்வரன் கோயில் முத்துக்குமார ஸ்வாமியும், மாயவரம் அபயாம்பிகா தேவியும், திருவாரூர் தியாகராஜப் பெருமாள், கமலாம்பா, க்ஷோட சகணபதி, நாகப்பட்டினம் நீலாயதாக்ஷி அம்மன், சௌந்தி ராஜப் பெருமாளும், தஞ்சை பிரகதீஸ்வரர், பங்காரு காமாக்ஷி, கும்பகோணம் சாரங்கபாணிஸ்வாமி, வரகூர் வெங்கடேசப் பெருமாள் ஆகிய தெய்வங்களின் பேரில் வாக்கேயக்காரர்கள் உருப்படிகளை இயற்றியுள்ளனர். வாக்கேயக்காரர்களின் ஜனன பூமியாகிய திருவாரூர் (தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி), முடிகொண்டான் (கோபால கிருஷ்ணபாரதி), வையச்சேரி (மஹாவைத்தியநாத அய்யர்), தில்லையாடி (அருணாசலக்கவிராயர்), திருவிசை நல்லூர் (அய்யாவாள்), வைத்தீஸ்வரன் கோவில் (கனம்கிருஷ்ணய்யர்) ஆகிய ஊர்களும் அன்றைய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவைகளே. மேலும்

திருவையாற்றில் தியாகராஜர் சமாதியும், திருப்பந்துருத்தியில் நாராயண தீர்த்தரின் சமாதியும் உள்ளன. இங்கு இசைக் கலைஞர்கள் வந்து பாடி அம்மகான்களுக்கு அஞ்சலி செலுத்தும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது. இக்காரணங்களை கொண்டே சங்கீதப் பீடங்களுள் தஞ்சைக்கு நிகர் வேறெதுவுமில்லை என்று கூறலாம். இன்றைக்கு இம்மாவட்டம் நிர்வாக வசதிக்காக தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை ஆகிய நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

சென்னை ஒரு சங்கீதப் பீடமாக வளர்ச்சி பெற்றதற்கான சூழ்நிலைகள்.

சென்னையில் பல லக்ஷணக்காரர்களும், வித்வான்களும், சங்கீத ரசிகர்களும், இசையை ஆதரித்த பிரபுக்களும் வாழ்ந்து பிரசித்தியுடன் விளங்கியக் காரணத்தினால்தான் சென்னை ஒரு சங்கீதப் பீடமாக விளங்கி வந்துள்ளது. மற்ற சங்கீத பீடங்கள் யாவும் ஒரு ராஜாவால் ஆளப்பட்டதாகவோ அல்லது ஜமீன்தார் பாதுகாப்புக்குட்பட்டதாகவோ இருந்து வந்திருக்கின்றன. ஆனால், சென்னை இவ்விரு வகையிலும் சேராததாயிருந்தும் ஒரு சங்கீதப் பீடமாக வளர்ந்து வந்திருப்பதானது ஓர் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சியாமா சாஸ்திரி

சென்னையில் முதன் முதலில் வாழ்ந்துவந்த வாக்கேயக்காரர்களுள் 18-ம் நூற்றாண்டில் வாழ்ந்த பைடால குருமூர்த்தி சாஸ்திரியும் ஒருவர். இவர் ஒரு பெரிய வாக்கேயக்காரர் என்பது “வெளிகீத பைடால குருமூர்த்தி சாஸ்திரி” “நாலு பதிவேல ராகால குருமூர்த்தி சாஸ்திரி” என்ற சிறப்பு பெயர்களால் புலனாகும். கோவூர் சமஸ்தான வித்வானாயிருந்த வீணை குப்பையர் சென்னை வாசியேயாவார். இவர் தியாகராஜரின் நேர் சிஷ்யர். 20 ஆண்டுகளுக்கு மேல் அவருடன் தொடர்பு கொண்டவர். குப்பையர் ஓர் சிறந்த வாக்கேயக்காரர். சாஸ்திரீய நுட்பங்களுடன் கூடிய க்ருதிகள், கீர்த்தனைகள், வர்ணங்கள், தில்லானாக்கள் ஆகியவைகளை இயற்றியுள்ளார். நாராயண கௌள ராகத்தை கையாளுவதில் இவருக்கிருந்த தனிச் சிறப்பால் இவர் “நாராயண கௌள குப்பையர்” என்று அழைக்கப்பட்டார். இவர் ஒரு சிறந்த காயகர், வைணிகர், வயலின் வாத்ய நிபுணர். காளஹஸ்தீச பஞ்ச ரத்னம், வெங்கடேச பஞ்ச ரத்னம் ஆகிய தொகுதிக் கீர்த்தனைகளையும் செய்துள்ளார்.

இவரது மகனாகிய திருவொற்றியூர் தியாகய்யர் மற்றும கொத்தவாசல் வெங்கட்ராம அய்யர், சீதாராமய்யர், பிடில் பொன்னுசாமிப் பிள்ளை முதலியவர்கள் இவரது முக்கிய சிஷ்யர்களாவார்கள். வீணை குப்பைய்யருக்கு ‘கானச்சக்கரவர்த்தி’ என்ற பட்டப் பெயரும் உண்டு. இவர் திருவொற்றியூரை விட்டு சென்னையிலுள்ள முத்தியாலுப்பேட்டை யில்தான் வசித்து வந்தார். குப்பைய்யரது அழைப்பின் பேரில்தான் தியாகராஜ ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்தபோது திருவொற்றியூர் பஞ்சரத்னம் என்ற 5 க்ருதிகள் ஸ்ரீ திரிபுர சுந்தரி அம்மன் பேரிலும், கோவூரில் ஸ்ரீ சுந்தரேசப் பெருமாள் பேரில் 5 க்ருதிகளை; கோவூர் பஞ்சரத்னம் என்ற பெயரிலும் பாடியுள்ளார். வீணைகுப்பைய்யர் விநாயக சதுர்த்தி விழாவை பெரிய வித்வான்களைக் கொண்டு சிறப்பாக அவரது இல்லத்தில் நடத்தி வந்தார். அப்போது தென்னிந்தியாவில் இருந்த பெரிய வித்வான்கள் யாவரும் சென்னையில் கூடுவது வழக்கம்.

ஸ்வாதித் திருநாள் மஹா ராஜாவால் தந்தத்திலான வயலின் கொடுத்து கௌரவிக்கப்பட்ட வடிவேலு 1828-ல் சென்னைக்கு வந்தார். திருவொற்றியூர்

தியாகய்யர், பலருக்கு இங்கு இசை கற்பித்தார். அவர் சென்னை ஜார்ஜ் டவுனில் தங்கி இருந்தார். இவர் ‘பல்லவீஸ்வர கல்பவல்லி’, ‘சங்கீர்த்தன ரத்னவல்லி’ ஆகிய இசை நூல்களை வெளியிட்டார். இவர் க்ருதிகள், ராக மாலிகைகள், வர்ணங்கள் முதலியவைகளை செய்துள்ளார்.

19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சங்கீத மேதையாகிய தச்சூர் சிங்கராச் சார்யுலு சென்னையில் தான் வசித்து வந்தார். இவரது வித்வத் திறமையினால் வித்வான்கள் பலரை சென்னைக்கு வந்து தங்கும்படி செய்தார். அவரது

பெங்களூர் நாகரத்தினம்மாள்

தமையனார் சின்ன சிங்காராச்சார்யுலு அவர்களும் வந்திருந்தார். இவர்கள் இருவரும், இங்கு பல சிஷ்யர்களுக்கு சங்கீதம் கற்பித்தார்கள். பட்டணம் சுப்ரமண்ய அய்யர், பல்லவி சேஷய்யர் ஆகியோர் சென்னையில் வந்து தங்கினார்கள். சேலம் மீனாக்ஷி அவர்களின் குமாரத்திகளுக்கு பட்டணம் சுப்ரமண்ய அய்யர், சங்கீதம் கற்பிப்பதற்காக சென்னை வந்து நீண்ட காலம் தங்கிவிட்ட காரணத்தினாலேயே இவர் ‘பட்டணம் சுப்ரமண்ய அய்யர்’ என்ற பெயரால் அழைக்கப்பட்டார்.

சென்னையில் வசித்த வேறு சில இசை மேதைகளுள் பண்டிட் லட்சுமணாச்சாரியார், நடுக்காவேரி வைத்யநாத அய்யர், போட்டோகிராப் மாசிலாமணி முதலியார், காளஹஸ்திரி வீணை வெங்கடசாமி ராஜு, தென்மட்டம் நரசிம்மாச் சாரியார், ஹார்மோனியம் கந்தசாமி முதலியார், பெங்களூர் நாகரத்தினம்மாள், வீணை தனம்மாள் முதலியோர் குறிபிடத்தக்கவர்கள்.

வைதீக கானத்திலும் சென்னை ஓர் முக்கிய மையமாக இருந்தது. அல்லூரி வெங்கடாத்ரி திருவல்லிக்கேணியில் வசித்தார். பத்ராசலராமதாஸ் வழி வந்த ஆதிநாராயணதாஸ் நடத்தி வந்த ராமநவமி உற்சவங்களில் பக்தி இசை வெள்ளம் கரை புரண்டோடியது. தேவாரம், திருப்புகழ் சபைகள் பல புகழ் பெற்று விளங்கின. அருட்பா இயற்றிய ‘இராமலிங்க அடிகள் சென்னைக்கு அடிக்கடி வந்து தங்கினார். சென்னையிலுள்ள கந்த கோட்டப் பெருமாள் மீது ‘ஒருமையுடன் நினது திருமலரடி’ என்ற பாடலை அவர் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது. திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமியின் பேரில் தியாகராஜர், ஸாரிவெடலின பார்த்தசாரதி என்ற க்ருதியும் (தோடியில்), மைசூர் சதாசிவராவ், பைரவியில் ஸ்ரீ பார்த்தசாரதி ‘வாசாம கோசருண்டனி’ என்ற அடாணா க்ருதியும், சுப்பராய சாஸ்திரி ‘நினுஸேவிஞ்சின’ என்ற யதுகுல காம்போஜி கிருதியும், செய்யூர் செங்கல்வராய சாஸ்திரி ‘பார்த்தசாரதி’ என்ற க்ருதியும், இராமநாதபுரம் ஸ்ரீநிவாசய்யங்கார் ‘பார்த்தசாரதிநன்னு’ என்ற மத்யமாவதி க்ருதியும் இயற்றியுள்ளனர்.

சென்னையில் பல சங்கீத விழாக்களும், மகாநாடுகளும், உற்சவங்களும் நடைபெற்ற காலங்களில், நூற்றுக்கணக்கான இசை மேதைகள் வந்து பங்கு கொண்டுள்ளனர்.

நாதமுனி பாண்டு வாத்யக் குழுவினர் முதன் முதல் வாசித்தது இங்குதான். மணலி முத்துகிருஷ்ண முதலியார், மணலி சின்னைய்யா முதலியார், கோவூர் சுந்தரேச முதலியார் போன்ற செல்வந்தர்கள் சென்னைக்கு வந்த இசைக்கலைஞர்களை ஆதரித்து வந்துள்ளனர்.

இவர்கள் அருணாசலக் கவிராயர், அருணகிரி நாதர், இராம ஸ்வாமி தீக்ஷிதர் போன்றவர்களுக்கு கனகாபிஷேக வைபவத்தையும் சென்னையில் நடத்தியுள்ளனர். சுப்பராம தீக்ஷிதர் ‘சங்கீத சம்பிரதாய பிரதர்ஸணி’ என்ற இசை நூலை வெளியிட்டது இங்குதான்.

சென்னையில் சொண்டி வெங்கட ரமணய்யா, பல்லவி துரைசாமி அய்யர் போன்றோர் விஜயம் செய்துள்ளனர். பல இசைச் சஞ்சிகைகள் இங்கு வெளியிடப்பட்டுள்ளன.

இவ்விதமான சூழ்நிலைகள் சென்னை ஒரு இசைச் சிறப்பு பெற்ற சங்கீதப் பீடமாக அக்காலத்திலேயே விளங்கிட காரணமாக இருந்துள்ளன.

– ஆர்.வி.கிருஷ்ணன்

chennai fine arts

ANNUAL MUSIC FESTIVAL 2024

DAY & DATE	10.30 a.m. - 11.30 a.m.	11.45 p.m. – 12.45 p.m.	2.30 p.m. - 4.00 p.m.	4.15 p.m. - 6.15 p.m.	6.30 p.m. - 9.00 p.m.
21.12.2024 Saturday	Inauguration of Festival & Award Function	*Digvijaya Nādavāni* A.K.C Natarajan - Clarinet B S Ramesh Babu - Nagaswaram Madipakkam Suresh - Mrudangam G Ravichandran - Ghatam	Sai Sisters (Kiran & Nivi) - Vocal V.S.Gokul - Violin A.Rohith- Mrudangam Trivandrum R. Rajesh - Ghatam	Pattabhirama Pandit - Vocal TKV Ramanujacharlu - Violin H.S.Sudheendra - Mrudangam Trichy Krishnaswamy - Ghatam	Dr.Pantula Rama - Vocal MSN Murthy - Violin Manoj Siva - Mrudangam Udupi Sridhar - Ghatam
DAY & DATE	9.30 a.m. - 11.30 a.m.	1.15 p.m. - 2.15 p.m.	2.30 p.m. - 4.00 p.m.	4.15 p.m. - 6.15 p.m.	6.30 p.m. - 9.00 p.m.
22.12.2024 Sunday	Nirmala Rajasekar - Vina R.Rahul - Violin Thanjavur TR Govindarajan - Special Tavil Thanjavur Murugabupathy - Mrudangam S.V.Ramani - Ghatam	Shri Sisters - Vocal (Madhuvanthi Vijayaganesh & Sumedha Vijayaganesh) Shreya Anil - Violin Ram Sivasubramaniam - Mrudangam	Vivek Moozhikulam - Vocal Sweta Anandasivan - Violin Nikshit Puttur - Mrudangam	Dr.Niranjana Srinivasan - Vocal Parur MK Anantalakshmi - Violin Thirunageswaram TRS Manikandan - Mrudangam Sukanya Ramgopal - Ghatam	Palghat Dr R Ramprasad - Vocal Trivandrum Sampath - Violin Neyveli Narayanan - Mrudangam Alathur Rajaganesh - Kanjeera
23.12.2024 Monday	B.U.Ganeshprasad - Vocal Mysore V Srikanth - Violin R Sankaranarayanan - Mrudangam Prasanna Hariharan - Ghatam	E.R.Anirudh - Vocal Chittoor Bhargav Vignesh - Violin Mysore Vadiraj - Mrudangam	Lathangi Sisters - Vocal (Archana Samanvi) Shiva Teja - Violin Thirucherai Koushik- Mrudangam Sai Bharath - Kanjeera	Dr.S.Nithyasree - Vina B.Sivaraman - Mrudangam N.Guruprasad - Ghatam	Prince Rama Varma - Vocal S.Varadarajan - Violin S.J.Arjunganesh - Mrudangam Dr.S.Karthick - Ghatam
24.12.2024 Tuesday	Viji Krishnan & Sriram Krishnan - Violin Umayalpuram Mali - Mrudangam Vaikom Gopalakrishnan - Ghatam	Amrith Narayan - Vocal Meera Sundar - Violin Arjun Sundaram - Mrudangam	V.Subashri - Vocal Madhan Mohan - Violin Palani Balaji V - Mrudangam	Thirumalai Brothers - Vocal (P.B.Shrirangachari & Embar R Kasturi) Anayampatti G Venkatasubramanian-Violin PBV Krishnamachary-Mrudangam Nerkuman Dr.S Shankar - Kanjeera	Ramana Balachandhran - Vina Vijay Natesan - Mrudangam Chandrasekhara Sharma - Ghatam
25.12.2024 Wednesday	Dance Practice to Performance- potential possibilities 'in' and 'through' music Presentation by *Danseuse* Divya Kasturi, *Creative Director, DKC (UK), Founder - Srinidi*	Vaibhav Ramu - Vocal Vignesh Nydhruva - Violin Syamakrishna M - Mrudangam	Delhi R.Sridhar - Violin Aswin Sridhaar - Mrudangam D V Venkatasubramanian - Ghatam	S.Girijashankar - Vocal B.Anantakrishnan - Violin J.Vaidyanathan - Mrudangam Trivandrum Rajagopal - Kanjeera	*Digvijaya Nādavāni* Prof.V V Subramaniam & VVS Murari - Violin Dr. Trichy Sankaran - Mrudangam K V Gopalakrishnan - Kanjeera

You Are Welcome

CHENNAI FINE ARTS - chitravina@gmail.com, 9444076899

chennai fine arts

ANNUAL MUSIC FESTIVAL 2024

DAY & DATE	10.30 a.m. - 11.30 a.m.	11.45 p.m. – 12.45 p.m.	2.30 p.m. - 4.00 p.m.	4.15 p.m. - 6.15 p.m.	6.30 p.m. - 9.00 p.m.
26.12.2024 Thursday	Delhi P Sunder Rajan - Vocal Mysore V Srikanth - Violin Srimushnam V Rajarao - Mrudangam Anirudh Athreya - Kanjeera	Archana Murali - Vocal P.Akshaya - Violin Vamsidara Anand - Mrudangam	Shyama Sundar R-Vocal Gyandev Pappu - Violin Sunaada Krishna - Mrudangam G.Ganapathy - Ghatam	Kanchana Sisters - Vocal (Sriranjani & Shruthiranjani) Shree Lakshmi Bhat - Violin B Ganapathyraman - Mrudangam K R Sivaramakrishna - Kanjeera	T V S Mahadevan - Vocal B.U.Ganeshprasad - Violin *Digvijaya Nādavāni* Yella Venkateshwar Rao - Mrudangam Dr.Suresh Vaidyanathan - Ghatam
27.12.2024 Friday	"Sthree Thaal Tarang" Ghata Tharang Concert Sukanya Ramgopal - Ghata Tarang, Ghatam & Konnakol Charulatha Ramanujam - Violin Y G Srilatha Nikshit - Veena Lakshmi Rajasekar Iyer - Mrudangam Bhagyalakshmi M Krishna - Morsing	Aditi Sudarshan - Flute Krithik Koushik - Violin Srivatsan Srinivasan - Mrudangam	Veena Venkatramani - Vina B.S.Prashanth - Mrudangam K.Ranganathan - Ghatam	Prarthana Sai Narasimhan - Vocal Shraddha Ravindran - Violin Mysore Radhesh – Mrudangam Papanasam Dr.S.Sethuraman - Kanjeera	Lalgudi GJR Krishnan & Lalgudi Smt.Vijayalakshmi - Violin Sai Giridhar - Mrudangam S.Sunil Kumar - Kanjeera
28.12.2024 Saturday	Bangalore Brothers - Vocal (M.B.Hariharan & S.Ashok) Parur M.A. Krishnaswamy - Violin Trichur C Narendran - Mrudangam S.Venkatramanan - Kanjeera	P.Vikram - Vocal Kedar Vignesh - Violin Ajeet Sridhar - Mrudangam	Malavika Sundar - Vocal C.S.Chinmayee - Violin Palayankottai Guru Rahavendra - Mrudangam P Giridharaprasad - Kanjira	Vishal Sapuram - Chitravina Sruti Sarathy - Violin Kalladaikurichi Sivakumar - Mrudangam Kumbakonam S Balaji Sairam - Morsing	Kunnakudi Balamuralikrishna - Vocal Delhi P Sunder Rajan - Violin *Digvijaya Nādavāni* Haridwaramangalam Dr. A.K. Palanivel - Special Tavil B.Shree Sundarkumar - Mrudangam
29.12.2024 Sunday	Trivandrum Dr. K Krishnakumar - Vocal B V Rahavendra Rao - Violin S V Ramani - Mrudangam Madipakkam Murali - Ghatam	Akshara Samskriti - Vocal Mukundan Samraj -Violin Punnur Aravind Koushik - Mrudangam	Madurai Sivaganesh - Vocal Chidambaram Badrinarayanan - Violin Calcutta T K Karthik - Mrudangam	JB Keerthana Sriram - Vocal Gayathri Shrivani - Violin Kishore Ramesh - Mrudangam Sai Subramniam - Morsing	Akkarai Sisters - Vocal (Subhalakshmi & Sornalatha) Bhargav Tumkur - Violin Delhi Sairam - Mrudangam Giridhar Udupa - Ghatam
30.12.2024 Monday	Mangala Isai - Sembanarkoil SRGS Mohandass & Party	Darshan Padmanabhan - Vocal Madurai T Kishore - Violin R.Rajesh - Mrudangam	Hamzini Vaitheeswaran - Vocal G Kailasapathy - Violin R.Ramkumar - Mrudangam	Dr.S.Radhakrishnan - Double Violin Neyveli KV Ramkumar & Neelamani Ramakrishnan - Mrudangam N Rajaram - Ghatam	Carnatica Brothers - Vocal (KN Shashikiran & Chitravina P Ganesh) V.V.Srinivasa Rao - Violin Tumkur B Ravishankar - Mrudangam B S Purushotham - Kanjeera
31.12.2024 Tuesday	Trichur V Ramachandran - Vocal V V Ravi - Violin Thiruvarur Bakthavatsalam - Mrudangam B S Purushotham - Kanjeera		Festival Supported by Ministry of Culture Govt. of India New Delhi	VENUE SRINIVASA SASTRI HALL, LUZ, CHENNAI FREE ENTRY	Dr. Umayalpuram K Sivaraman Presents GEETA VADYA SANGAMAM *Digvijaya Nādavāni Dr.* Umayalpuram K Sivaraman - Mrudangam Vinay Sharva - Vocal, Amith Nadig - Flute, Arun Kumar - Rhythm Pad Mannargudi V Sankararaman - Harmonium

CHENNAI FINE ARTS - chitravina@gmail.com, 9444076899

ANDAL

பக்த மீராவை அறிந்த வட நாட்டவருக்கு திருப்பாவை அருளிய நமது ஆண்டாளையும் அறிமுகப்படுத்தும் விதமாக கவி சுப்ரமணிய பாரதி ஆங்கிலத்தில் எழுதிய அரியக் கட்டுரை. டிசம்பர் - 11 பாரதியார் பிறந்த நாள்.



Pre occupied from the earliest times with divine knowledge and religious aspirations, the Indian mind has turned all forms of human life and emotion and all phenomena of the universe in to symbols and means by which the embodied soul may strive after and grasp the Supreme. Indian devotion has especially seized upon the most intimate human relations and made them stepping stones to the super human.

God the guru, God the master, God the friend, God the mother, God the child, God the self, each of these experiences – for to us these are more than more ideas – it has carried to its extreme possibilities .

But none of them has been pursued, embraced, sung with a more exultant passion of intimate realisation than the yearning for God the Lover, God the Beloved. It would seem as if this passionate human symbol were the natural culminating point for the mounting flame of the soul's devotion; for it is found wherever that devotion has entered in to the most secret shrine of the inner temple.

We meet it in Islamic poetry; certain experiences of the Christian mystic repeat

the forms and images with which we are familiar in the East, but usually with a timorousness, foreign to the Eastern temperament. For the devotee who has once had this intense experience it is that which admits the most profound and hidden mystery of the universe; for him the heart has the key of the last secret.

The work of a great Bengali poet has recently re-introduced this idea to the European mind, which has so much lost memory of its old religious traditions as to welcome and wonder at it as a novel form of mystic self expression. On the contrary, it is ancient enough, like all things natural and eternal in the human soul. In Bengal a whole period of national poetry has been dominated by this single strain and it has inspired a religion and a philosophy. And in Vaishnavism of the far south, in the songs of Tamil Alwars, we find it again in another form giving a powerful and original turn to the images of our old classic poetry; for there it has been sung out by to the rapt heart of a woman to the heart of the universe.

The Tamil word Alwar means one who has drowned, lost himself, in the sea of the Divine Being. Among the canonised saints of Southern Vaishnavism ranks Vishnuchitha, a Yogin and a poet of Villiputtur in the land of the Pandyas. He is termed Periya Alwar, the Great Alwar. A tradition, which we need not believe, places him in the ninety eighth year of the Kali Yuga. But these Divine singers are ancient enough, since they precede the great saint and philosopher

Ramanuja whose personality and teachings were the last flower of the long growing Vaishnava tradition. Since his time, southern Vaishnavism has been a fixed creed and a system rather than a creator of new spiritual greatness.

The poetess Andal was the foster daughter of Vishnuchitha, found by him, it is said, a new born child under the sacred Tulsi plant. We know little of Andal except what we can gather from a few legends, some of them richly beautiful and symbolic. Most of Vishnuchitha's poems have the infancy and boyhood of Krishna for their subject. Andal, brought up in that atmosphere, cast in to the mould of her life what her foster father has sung in inspired hymns. Her own poetry – we may suppose that she passed early in to the Light towards which she yearned, for it is small in bulk – is entirely occupied with her passion for the Divine Being. It is said that she went through a symbolic marriage with Sri Ranganatha, Vishnu in his temple at Srirangam, and disappeared in to the image of her Lord. This tradition probably conceals some actual facts, for Andal's marriage with the Lord is still celebrated annually with considerable pomp and ceremony.

●

பாவையின் மதுர பக்தி

– சின்னமனூர் அ.சித்ரா

‘மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள்!’ இம் மாதத்தில் இறைச்சக்தியானது பூவுலகில் நிறைந்திருக்கும் என புராணங்கள் கூறுகின்றன. புலன்கள் அனைத்தும் இறைச் சிந்தனையிலேயே ஈடுபட்டிருக்க வேண்டும் என்பதற்காகவே நமது வழக்கமான சடங்குகளுக்கு இம்மாதத்தில் விடுப்பு தர முன்னோர்கள் விதிமுறைகளை வகுத்து விட்டுப் போயுள்ளனர்.

பனி உலவும் மார்கழியில் ‘பாவை நோன்பு’ என்பது தமிழகத்தில் தொன்றுதொட்டு நிகழ்ந்து வரும் ஒரு மரபு. பெண்களால் மேற்கொள்ளப்படும் வழிபாட்டு முறை.

பாகவதத்தில் இடம் பெறும் ‘காத்யாயனி’ விரதம் இத்தகையதே. இதற்கான ஆதாரமாக சங்க இலக்கிய நூல்கள் திகழ்கின்றன. பரிபாடலிலும் இந்நோன்பு பற்றிய விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. பகவத் கீதையில் மாதங்களில் சிறந்தது மார்கழி எனவும், கண்ணபிரானே, மார்கழி மாதமாய் விளங்குவதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆண்டாளின் திருப்பாவையில்,

மார்கழித் திங்கள் மதிநிறைந்த
நன்னாளில்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்த கோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்...

செல்வ வளம் நிறைந்த திருவாய்ப்பாடியில் பொருள், அருள் செல்வங்களையும், இளமையையும் உடைய பெண்களே! நல்ல அணிகளை அணிந்துள்ளவர்களே! மாதங்களில் சிறந்த மார்கழி மாதத்தில் முழுமதி நிறைந்த நல்ல நாள் பொருந்தியுள்ளது. கூர்மையான வேலையுடையவனும், கொடிய செயலைக் கொண்டவனுமான நந்தகோபனின் மகன்; அழகு நிறைந்த கண்களையுடைய யசோதையின் இளஞ்சிங்கம் போன்றவன், கரியமேகம் போன்ற மேனியுடையவன், சிவந்த கண்களை உடையவன், சூரியன் - சந்திரன் போன்ற முகமுடையவன்,

இத்தகைய இயல்புடைய நாராயணனே நமக்கு அருள் செய்வான். ஆதலால் இந்த உலகத்தவர் பாராட்டுமாறு இப்பாவை நோன்பை மேற்கொண்டு நீராடுவதில் விருப்பம் உடையவரே! வருவீராக!

என்று மார்கழி மாதத்தில் ஒவ்வொரு நாளிற்கும் வெவ்வேறு பொருளுடைய பாடலைப் பாடி அருளியுள்ளார்.

ஆண்டாளின் மதுரபக்தி

ஆண்டாள் கண்ணன்பால் கொண்டது பக்தி கலந்த காதல். பக்தியை பல வகைகளில் பக்தர்கள் வெளிப்படுத்தினார்கள் என்பதற்குச் சான்று; இறைவனை, தந்தை - மகனாக திருஞான சம்பந்தரும், ஆண்டான் அடிமையாக திருநாவுக்கரசரும், நண்பனாக சுந்தரரும், காதலன் காதலியாக மாணிக்கவாசகரும் உறவுகளாகப் பாவித்து அனுபவித்து இறைவனோடு இரண்டறக் கலந்து விட்டதை திருமுறைகள் கூறும்.

ஆண்டாள் பாவை நோன்பு மேற்கொண்டு கண்ணனின் மீது பக்தி கலந்த காதலை மதுர பக்தியாகக் கையாண்டாள். மதுர பக்தி என்பது வெளிப்படையான காதல், உள்ளார்ந்த பக்தி, உறவு, பிரிவு, ஊடல், உவகை, துயரம், ஏக்கம், எதிர்பார்ப்பு, கூடல் போன்ற பல்வகை உணர்வுகளின் உன்னத நிலையே மதுர பக்தி. இவற்றைச் சொற்களால் உணர்த்த முடியாது. உணர்வுப் பூர்வமாக மட்டுமே அனுபவிக்க முடியும். இது ‘ஜீவாத்மா பரமாத்மாவைச்’ சேர்ந்தடைவதேயாகும். இந்த முக்தி நிலையாகிய மதுர பக்தியின் மூலமாக கண்ணனைப் பற்றிப் பாடி ஆடி மகிழ்ந்தாள் ஆண்டாள்.

வாரணமாயிரம் சூழவலம் செய்து

நாரணன் நம்பி நடக்கின்றார் என்எதிர்

பூரணப் பொற்குடம் வைத்துப் புறமெங்கும்

தோரணம் நாட்ட கனாக்கண்டேன் தோழி...

எனவும்,

கண்ணனை...

கைத்தலம் பற்றுவதாகவும், அம்மி மிதிப்பதாகவும்...

மத்தளம் கொட்டி வரிச்சங்கம் ஊதவும்...

தீவலம் செய்வதாகவும்... மஞ்சனம் கட்ட...

கனவு கண்டாள்... ஆண்டாள்...

அவள் கண்ட கனவினை

நினைவாக்கினான் கண்ணன்...

இந்நிலை காதலின் உன்னத வெளிப்பாடு இவற்றையே நாட்டியத்தில் நாயகா நாயகி பாவம் என்றும், தலைவனை நினைத்த தலைவியின் அஷ்டவித நாயகியின் வெளிப்பாடு என்றும், நாட்டிய உருப்படிகளாகிய பதம், ஜாவளி, அஷ்டபதி... போன்றவற்றின் மூலமாக அபிநயத்துக் காட்டப்படுகிறது.

பக்தியும் - ஆடலிசையும்

பக்தி நெறிமுறைகளில் ஆடலிசையும் ஒன்று. இவற்றில் திழைத்து நிற்பது பக்தியே. எனவேதான், திருஞானசம்பந்தர் “உளங்கனிந்த போதெல்லாம் உவந்து உவந்து பாடுவேன்” என்கிறார். கல் மனம் படைத்தோரையும் கரைக்கவல்லது ஆடலிசை. இவ்வுலகில் எவருடைய மனதையும் விரைவில் மாற்றும் சக்தி எதற்கேனும் உண்டென்றால், அது இசைக்கும், நடனத்திற்கும் உண்டு எனலாம். இவ்வழியில் ஆண்டவனை வழுத்திப் பேறுபெற்றோர் பலர்.

பன்னிரு திருமுறைகளும் இசையின் பாற்பட்டது. தேவாரம் பாடிய மூவரின் பாடல்களில் விஞ்சி நிற்பது இசையே. சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் இசையால் பக்தி செய்து வழிபட்டோர்களுள் ஆனாயர், திருநீல கண்டர் போன்றோர் குறிப்பிடத்தக்கவராவர். குழல், யாழ் போன்ற கருவிகளைக் கொண்டு பண்ணோடு அமைந்த பாடல்களைப் பாடி இறைவனுக்குச் சூட்டினர். அடியார்களைப் பொறுத்த வரையில் இசையானது, தம் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கருவியாக மட்டும் அமையாது. இறைவனைப் போற்றிப் பரவும் தெய்வீக இசையாகவும் மாறியது எனலாம்.

அரையர் சேவை:

வைணவக் கோயில்களில் கடைப்பிடிக்கப் பட்ட ஒருவகை தெய்வ வழிபாட்டு முறை அரையர் சேவை. இவ்வழிபாட்டு முறைகளை ஆண்கள் மட்டுமே நடத்தி வந்ததாகச் சொல்லப் படுகிறது. இவை இன்றும் ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லி புத்தூர், ஆழ்வார்திருநகர் போன்ற வைணவக் கோயில்களில் நடைபெற்று வருகிறது.

திவ்ய ப்ரபந்த அகராதியின்படி பிரபந்தத்தை வைணவ கோயில்களில் தெய்வவழிபாட்டிற்காக பாடுவதற்கு ‘அரையர் சேவை’ என்று கூறப்படுகிறது. ஸ்ரீரங்கத்தில் பத்தாம், பதினொன்றாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அரையர்களின் நாமங்கள் அரையர் சேவையின்போதும், பத்து அவதாரங்களைப் பற்றிய பாடல்களும், நம்மாழ்வார் தொகுத்ததிலிருந்து நாயகா, நாயகி பாவமுடைய பாடல்களை ஆடிப் பாடுவதற்கும் ‘அருளவது’ என்ற பெயர் சூட்டப்பட்டு வழிபாடுகள் செய்து வருகின்றனர்.

இவர்கள் ஆடும்போது நிருத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததாகத் தெரியவில்லை. தட்டடவு மட்டும் அதில் அமைத்து, தாளம் மட்டுமே பக்க வாத்தியமாகக் கொண்டு ஆடியதாகக் கூறப்படுகிறது. மேலும் அரையர்கள் சின்னச் சின்ன அசைவுகளுடன் முன்னும், பின்னும் நடந்து அபிநயம் செய்ததாகவும், தாளத்துடனும் இந்த அரையர் சேவை துவங்குவதாகக் கூறப்படுகிறது. பின்பு இறைவனைப் போற்றிப் பாடும் நிலைக்கு வரும்போது தாளத்தை இடுப்பில் கட்டிக் கொண்டு, கை முத்திரைகளைக் காட்டி இறைவனுக்கு முன்னால்

வேறெங்கெ?

சக்ரவர்த்தி தாமர்லேன் சொந்தமாக சில பாடல்களை தயார்படுத்தி இருந்தார். அவற்றை அரசவைக் கவியான நஸுருத்தினிடம் பாடிக்காட்டி அபிப்பிராயம் கேட்டார். "கேட்கவே நாராசமாக இருக்கிறது. இதெல்லாம் ஒரு பாட்டா?" உங்களுக்குத் தெரியாத விஷயங்களில் எல்லாம் ஏன் மூக்கை நுழைத்து அவமானப்பட வேண்டும்" என்று தன் மனதில் பட்டதை நஸுருத்தின் அபிப்பிராயமாகக் கூறிவிட்டார்.

இதைக் கேட்டதும் சக்ரவர்த்தி தாமர்லேனு-க்கு வந்ததே கோபம்... முகத்தில் எள்ளும் - கொள்ளும் வெடிக்க, நஸுருத்தினைப் பிடித்து கழுதை லாயத்தில் அடைக்கும்படி அரசவைக் காவலர்களுக்கு உத்தரவிட்டார்.

சில நாட்களுக்குப் பிறகு சக்ரவர்த்தி தாமர்லேன் மீண்டும் வேறு சில பாடல்களை தயார்படுத்திக் கொண்டு; நஸுருத்தினை சபைக்கு கொண்டு வரும்படி காவலர்களுக்கு உத்தரவிட்டார். அவரும் கொண்டு வரப்பட்டார்.

தாமர்லேன் தனது புதிய பாடல்கள் ஒவ்வொன்றாகப் பாடியபடி நஸுருத்தினின் முகக் குறிப்பை கவனித்து வந்தார். பாடல்கள் அனைத்தும் பாடி முடிந்ததும் நஸுருத்தின் எந்தவொரு பதிலும் கூறாமல் வந்த வழியே திரும்ப எத்தனித்தாள்.

"நில்... அபிப்பிராயம் ஏதும் சொல்லாமல் எங்கே போகிறாய்?" என்று கேட்டார் சக்ரவர்த்தி.

"வேறெங்கே... மீண்டும் பழையபடி கழுதை லாயத்துக்குத்தான்" என்று சொல்லியபடியே நஸுருத்தின் நடையைக் கட்டினார்.

அபிநயிப்பதாகவும், இச்சேவை முக்கியமாக மார்கழி மாத ஏகாதசியில் பத்து நாட்கள் கொண்டாடப்படுவதாகக் கூறப்படுகிறது.

இவற்றில் ஹம்ஸன் வதம், வாமன அவதாரம், இராவண வதம் என்றும் ஒன்பதாம் முக்கிய நிகழ்வாக திருமங்கையாழ்வாரின் மின்னுருவை என்ற பாடலுக்கு விஷ்ணு மேல் காதல் கொண்ட நாயகிக்கு குறத்தி கை பார்த்து குறி சொல்லும் கதை நாட்டியமாக நடைபெறுகிறது 'முத்துக்குறி' என்று சிறப்புடையதாக நிகழ்ந்ததெனக் கூறப்படுகிறது.

இவ்வாறாக இசையும் - நடனமும் சேர்ந்த பக்தியினால் இறைவனை வழிபட்டு வந்தவர்கள் பலர். ஆழ்வார்கள், நாயன்மார்கள், மீரா, ஸ்ரீ ஜெய தேவர், நாராயண தீர்த்தர், சூர்தாஸ், ஸ்ரீ சைதன்யர், அன்னமாச்சாரியர், சேத்ரஞ்ஞர், ஊத்துக்காடு வேங்கட சுப்பையர்.. இப்படி எத்தனையோ மஹான்கள் இறைவனின் அன்பைப் பெறுவதற்கு ஆண்டாள் செய்த தவம் போல, ஒவ்வொரு மஹானும் வெவ்வேறு பாதையில் சென்று 'பேரின்பத்தை' அனுபவித்துள்ளனர்.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு

பல கோடி நூறாயிரம்

மல்லாண்டதென் தோர் மணிவண்ணா

சேவடி செவ்வி திருக்காப்பு..

ஆண்டாளின் மதுரபக்தி கண்ணனுக்கே...

தீட்சிதரின் கமலாம்பாள் நவாவர்ண கீர்த்தனைகளின் சிறப்பு!

பரமன், ஜீவன், இறைவன் வழிபாடு ஆகிய விஷயங்களை ஆய்ந்து தெளிந்தவர்கள் நமது முன்னோர்கள். மனோதத்துவத்தை அறிந்த நமது முன்னோடிகள் நம்மிடம் அறிவுப்பக்குவம் அமைந்திருப்பதை கண்டறிந்து அதற்கேற்ப கடவுள் வழிபாடு, ஆத்ம சிந்தனை ஆகியவைகளை படிப்படியாக வகுத்தார்கள்.

இறைவனை மந்திர உருவத்தில் தியானித்து உன்னத நிலையை அடைதல், யந்திரம் (அல்) ஒரு சின்னத்தின் துணை கொண்டு வழிபட்டு நல்ல நிலையை அடைதல், தந்திரம் (அ) சாதக முறைகளின் மூலம் நமது உடலில் மறைந்து இருக்கும் ஸூக்ஷம சக்திகளைத் தட்டி எழுப்பி உள்ளொளி காணுதல் ஆகியவையே இதன் படிக்கற்கள்.

இவைகளை கருத்தில் கொண்டு, மகான் முத்துசாமி தீட்சிதர் திருவாரூரில் எழுந்தருளியுள்ள தியாகராஜ பெருமானின் இதய நாயகியாம் கமலாம்பாள் மீது 'நவாவர்ண கிருதிகள்' அமைத்து அதனுள் தேவியின் வசிய மந்த்ரம், சக்தி, சக்கரங்கள், ஆவரணம் இவைகளை உள்ளடக்கி கிருதிகளாக மாலை தொடுத்து உலகை உய்வித்துள்ளார்.

இது ஒரு எளிதான காரியமல்ல. தீட்சிதரின் குருநாதரான சிதம்பர நாதயோகி கற்றுத்தந்த ஸ்ரீ வித்யா மஹா ஷோட சாக்ஷரி தீட்சையின் அடிப்படையில் மட்டுமே இம் மாதிரியான அதிசயத்தக்க, பிரம்மாண்டமான சக்திகள் அடங்கிய கிருதிகளை தீட்சிதரால் அமைக்க முடிந்தது.

இக்கிருதிகளை பாடினாலோ அல்லது பாடக் கேட்டாலோ நம் வாழ்வு வளம் பெரும் என்பது சர்வநிச்சயம்.

கமலாம்பாள் மீது தீட்சிதர் பாடிய மொத்தம் பன்னிரண்டு கிருதிகளில் முதல் பாடல் த்யானம். இரண்டு முதல் பத்து பாடல்கள் வரை ஆவரணங்களிலும், பதினோராவது கிருதி மங்களமாகவும், பன்னிரெண்டாவது கிருதியை மந்த்ரக் கீர்த்தனையாகவும் இயற்றியுள்ளார்.

வேங்கடமஹி, ஊத்துக்காடு வேங்கட சுப்பிரமணியம் ஆகிய இருவரைத் தவிர இம்மாதிரியான மந்த்ரங்கள் உள்ளடக்கிய கிருதிகளை மற்றவர் பாடியதாகத் தெரியவில்லை. தீட்சிதர் இயற்றிய இப்பாடல்களின் சிறப்புகளை இனி காண்போம்.

முதல் பாடல் - த்யானம். **"கமலாம்பிகை ஆஸ்ரித கல்பதிகே"** என்ற தோடி ராகப் பாடல். இதில் "ஸகல லோக நாயிகே, ஸங்கீத ரஸிகே ஸுக வித்வப்ரதாயிகே, ஸுந்தரி கதமாயிகே" என தேவியை த்யானம் செய்கிறார்.

இரண்டாவது கிருதி - முதலாவது ஆவரணப் பாடல் **"கமலாம்பா ஸம் ரக்ஷது"** என்ற ஆனந்த பைரவ கிருதி. எப்போதும் பாடக் கூடிய மங்களகரமான பாஷாங்க ரக்தி ராகம். த்ரைலோக்ய மோகன சக்கர

தேவியை பிரகடயோகினி சக்தியுடைய 'திரிபுரா' என்ற சக்தி வடிவில் என்னென்ன சிறப்புகள் உண்டோ அத்தனையையும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

இந்த சக்தியின் மூல மந்த்ரமான **"அம்; ஆம்; ஸௌ; த்ரைலோக்ய மோகன சக்ர ஸ்வாமின்யை த்ரிபுரா சக்ரேஸ்வர்யை நம:"**

என்ற மந்த்ரத்தை 15 லட்சம் ஜபம் செய்தால், தேவியின் பூரண கடாக்ஷமும், ஸ்வர்க, மத்ய, பாதாள உலக வசியமும், ஸகல ஐஸ்வர்யமும் உண்டாகும்.

மூன்றாவது கிருதி - இரண்டாவது ஆவரணம். கல்யாணி ராகத்தில் அமைந்த **"கமலாம்பாம் பஜரே"** என்ற கிருதியை ஸர்வாஸா பரிபூரக சக்கரத்தின் தேவியான குப்த யோகினியை "த்ரிபுரேஸி" என அழைத்து அவளின் சக்திகளை ராகத்தின் ஸ்யரையை கிருதியில் அமைத்துத் தந்துள்ளார். இதுவும் த்விதீய ஆவரண நவாவர்ண கிருதியாகும்.



முத்துசாமி தீட்சிதர்

இந்த தேவியை, **"ஐம் - க்லீம், ஸௌ: ஸர்வாஸா பரிபூரக சக்ர ஸ்வாமின்யை த்ரிபுரேஸ சக்ரேஸ்வர்யை நம:"**

என்று 15 லட்சம் முறை ஜபம் செய்தால் தேவியின் அருளோடு எல்லா ஆசைகளும் நிறைவுறும்.

நான்காவது கிருதி - மூன்றாவது ஆவரணக்கிருதி - சங்கராபரண ராகத்தில் அமைந்த **"ஸ்ரீ கமலாம்பிகாயா"** என்ற கிருதி. அஷ்ட தளத்தில் ஸர்வக்ஷோபன சக்ரத்தில் குப்ததர யோகினியான த்ரிபுரசுந்தரி என்ற பெயரிலுள்ள தேவியின் சிறப்பியல்புகளை அற்புதமாக விளக்குகின்றார். இந்த தேவியை மனு, சந்திரன், குபேரன், லோபமுத்திரை, மன்மதன், அகஸ்தியர், அக்னி, ஸுர்யன், இந்திரன், ஸ்கந்தன், பரமசிவன், துர்வாஸர் ஆகிய 12 பேர் உபாஸித்தார்கள்.

இந்த தேவியின் மூலமந்திரமான **"ஹ்ரீம் - க்லீம் - ஸௌ - ஸர்வ ஸம்க்ஷோபண சக்ர ஸ்வாமின்யை த்ரிபுர ஸுந்தரி சக்ரேஸ்வர்யை நம:"** என்பதை 15 லட்சம் முறை ஜபம் செய்தால், தேவியின் அருள், நல்ல ஞானம், சர்வ மங்களம் உண்டாகும்.

ஐந்தாவது கிருதி - நான்காவது ஆவரணம். இது ஜன்ய ராகமான காம்போஜி ராகத்தில் **"கமலாம்பிகாயை"** என்ற கிருதியாக பாடியுள்ளார். சதுர்த்த சாரமாக ஸர்வ ஸௌபாக்ய தாயக சக்ரத்தில், ஸம்ப்ரதாய யோகினியாக உள்ள "திரிபுரவாஸினி" யாக பாவித்துப் பாடியுள்ளார். இந்த தேவிக்கு ஸம்ஷோபிணி முதலிய 14 சக்திகள் உண்டு.

இத்தேவதையை **"ஹைம் - ஹ்ஸக்லீம் - ஹ்ஸௌ: ஸர்வ ஸௌபாக்ய தாயக சக்ர ஸ்வாமின்யை த்ரிபுராவாஸினீ சக்ரேஸ்வர்யை நம:"**

என்ற மந்திரத்தால் 15 லட்சம் முறைகள் ஜபம் செய்தால் தேவியின் பரிபூர்ண அருளும், எல்லாவித ஸௌபாக்யங்களும் கிடைக்கும்.

ஆறாவது கிருதி - ஐந்தாவது ஆவரணம். மாலை வேளை ராகமான பைரவியில் அமைந்த **"ஸ்ரீ கமலாம்பாயா பரம்நஹிரே"** என்ற கிருதியில் ஸர்வார்த்த ஸாதக சக்ரத்தின் குளோத் தீர்ண யோகினி "த்ரிபுரா ஸ்ரீ" தேவியின் சிறப்பியல்புகளை வர்ணிக்கின்றார்.

இந்த தேவி ஸுஷீம்னா நாடியின் ராஜ வீதியில் உறையும் (மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விஸுத்தி ஆக்ஞா - கீழ்ஸஹஸ்ராராம், மேல் ஸஹஸ்ராராம், உள்நாக்கு இவற்றின் ஸமஷ்டி ஆகிய 10 ஸ்தானங்களில்) ஏகாக்ர சித்தமுள்ள யோகிகளுக்கு மட்டும் புலப்படும்.

இந்த தேவி சிணிசிணிசிணி,

கண்டாநாதம், சங்கநாதம், வீணாநாதம், லயம், தாளஒலி, வேணுநாதம், பேரிநாதம், மேகநாதம் என்ற 10 சூக்ஷ்ம நாத வடிவாக விளங்கும் சக்தி தேவதைகள் வழிபடும் பராசக்தி.

“ஹ்ரைம் – ஹ்ஸக்லீம் – ஹ்ஸௌ: ஸர்வார்த ஸாதக சக்ர ஸ்வாமின்யை த்ரிபுரா ஸ்ரீ சக்ரேஸ்வர்யை நம:” என்ற மந்திரத்தை 15 லட்சம் முறை ஜபித்தால் தேவியின் அருளும், ஸர்வார்த்த ஸாதக ஸித்திகளையும் அடைவார்கள்.

ஏழாவது கிருதி - ஆறாவது ஆவரணம். எப்போதும் இரவில் பாடக்கூடிய புன்னாகவராளி ராகத்தில் அமைந்த **“கமலாம்பிகாயம்”** என்ற கிருதியில் ஸர்வ ரக்ஷாகர சக்ரத்தில் நிகர்ப்ப யோகினியை “திரிபுராமாலினி” என்ற பெயரிட்டழைத்து பாடலை அமைத்துள்ளார்.

இந்த சக்கரம் 10 முக்கோணங்களை உடையது. இந்த தேவி 51 எழுத்துக்களை தனக்குள் அடக்கியுள்ள குண்டலினி சக்தி வடிவமானவள்.

மூலாதாரத்தில்	4 எழுத்துக்கள்
ஸ்வாதிஷ்டானத்தில்	6 எழுத்துக்கள்
மணிபூரகத்தில்	10 எழுத்துக்கள்
அனாஹதத்தில்	12 எழுத்துக்கள்
விசுக்தியில்	16 எழுத்துக்கள்
ஆக்ஞையில்	2 எழுத்துக்கள்
இத்துடன் ‘க்ஷ’	1 எழுத்து

மொத்தம் 51 எழுத்துக்கள் 51 மாத்ருகைகள் என்பர். குளமார்க்கத்தில் (வாமாசாரம்) உபாசிக்கும் தேவி கௌளினி எனப்படுபவள்.

இந்த தேவியை,

“ஹ்ரீம் – க்லீம் – ப் – லேம் – ஸர்வ ரக்ஷாகர

சக்ரஸ்வாமின்யை த்ரிபுர மாலினி சக்ரேஸ்வர்யை நம:”

என்ற மந்திரத்தால் 15 லட்சம் முறை ஜபம் செய்தால் தேவியின் பூர்ண கடாக்ஷமும், ஸகல விதமான ரக்ஷைகளையும் உடையவர்களாக திகழ்வார்கள்.

எட்டாவது கிருதி - ஏழாம் ஆவரணம், எப்போதும் பாடத்தகுந்த ஸஹானா ராகம். கிருதியினை ஸர்வ ரோகஹர சக்கரத்தின் ரகஸ்ய யோகினியான த்ரிபுராஸித்தா என்ற தேவியினை **“ஸ்ரீ கமலாம்பிகாயம் பக்திம்”** என்று பாடியுள்ளார்.

இந்த தேவியிடம் பரா - பஸ்யந்தி - மத்யமா- வஸினி முதலிய 8 அற்புத சக்திகள் உள்ளன. மேலும் உலகைப் பீடிக்கும் ஸம்ஸாரம் என்ற பிணியை தீர்க்கும் ஸர்வரோஹ ஹாம் என்னும் அஷ்ட கோண சக்கரத்தில் விளங்கும் ராஜயோகினி. ஜீவப்ரம்ம ஒருமைப்பாட்டை உணர்ந்த ஞானிகள். தேவகணங்கள். மானிடர் முதலியவர்களுக்கு பேரானந்தம் அளிக்கும் கொள்கலம் போன்றவள்.

இந்த தேவியை, **“ஹ்ரீம் – ஸ்ரீம் – ஸௌ: சர்வ ரோக ஹர சக்ரஸ்வாமின்யை த்ரிபுரா ஸித்தா சக்ரேஸ்வர்யை நம:”**

என்ற மந்திரத்தால் 15 லட்சம் முறை ஜபித்தால், நீண்ட ஆயுள். நீண்ட கால நோயிலிருந்து விடுபடல் மற்றும் திடகாத்திரமான உடல் பெற்று வாழ்வார்கள்.

ஒன்பதாவது கிருதி - எட்டாவது ஆவரணம். **“கமலாம்பிகே அவாவ”** என்ற கண்ட ராகக் கீர்த்தனை (மாலையில் பாடும் ராகம்) சர்வ ஸித்திப் பிரத சக்ரமதிலுள்ள “அதி ரகஸ்ய யோகினி”யான “த்ரிபுராம்பாள்” மீது அதிசயத் தக்க பல ரகஸ்ய விவரங்களை இயைபு கெடாமல் பாடியிருக்கிறார்.

இந்த தேவி மோட்ச மாளிகையின் வாயிலான இந்த சக்கரத்தின் முக்கோணங்கள் என்ற கதவுகளில் அமைந்து பிரணவ ரூபமான தம் ஓசையின் மூலம் அடியார்களை சிந்தாமணி அறைக்கு அழைக்கும் கண்டாநாதம் (மணிஓசை) கோஷிக்கும் பெருமை வாய்ந்தவள்.

“ஹ்ஸ்ரைம் – ஹஸ்ரக்லீம் – ஹ்ஸ்ரௌ – ஸர்வ ஸித்தி ப்ரத சக்ர ஸ்வாமின்யை த்ரிபுராம்பா சக்ரேஸ்வர்யை நம:”

என்ற மந்திரத்தை 15 லட்சம் முறை ஜபித்தால் எல்லா ஸித்திகளையும் கொடுத்து காப்பாற்றுவாள்.

பத்தாவது கிருதி - ஒன்பதாவது

ஆவரணம். **"ஸ்ரீ கமலாம்பா ஜயதி"** என்ற ஆஹிரி ராகக்கிருதி (முற்பகலில் பாடக் கூடாதது) ஸர்வானந்த சக்கரத்தின் "பராபராதி ரகஸ்ய யோகினி"யான "மகா த்ரிபுரசுந்தரி" மீது பாடப்பட்டது. இதில் தேவியின் பல ரகஸ்ய குணங்கள் விளக்கப்பட்டுள்ளன.

இந்த தேவி ககாரத்தை ஆதியாகக் கொண்ட (காதிவித்தை) ஹகாரத்தை ஆதியாகக் கொண்ட (ஹாதி வித்தை) ஸகாரத்தை ஆதியாகக் கொண்ட (ஸாதிவித்தை) மந்தஸ்வரூபமாக இருப்பவள்.

இந்த தேவியை, **"ம், க, ஏ, ஈ, ல, ஹ்ரீம் – ஹஸகஹ ல ஷ்ரீம் ஸகல ஹ்ரீம் ஸ்ரீம் ஸர்வானந்த மய சக்ரஸ்வாமின்யை மகா திரிபுரசுந்தரி சக்ரேஸ்வர்யை நம:"**

என்ற மந்திரத்தை ஜபிப்பவர்களுக்கு ஸர்வ மங்களத்தையும், பேரின்பத்தையும் கொடுத்து ஸ்ரீ லலிதா மகா த்ரிபுர சுந்தரி ஆனவள் காப்பாற்றுவாள்.

பதினோறாவது கிருதி - மங்கள கிருதி. "ஸ்ரீ ராகத்தில்' அமைந்த **"ஸ்ரீ கமலாம்பிகே ஸிவே"** என்ற கிருதியில் தேவியின் பெருமைகளை விவரித்துப் பாடியுள்ளார். இதில் ராகா சந்திரமுகீ, ரக்ஷித கோலமுகீ, ரமாவாணிஸகீ, ராஜயோகஸுகீ என்று அற்புதமான வர்ணனைகளில் பாடியுள்ளார்.

12வது கிருதி - மந்த்ரக்கீர்த்தனை. மத்யமாவதி ராகத்தில் அமைந்த **"ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரீம்"** என்ற கீர்த்தனையில் தேவியை தம் வசம் கொள்ள ஒன்பது மந்திர பிரயோகங்களை கிருதியில் வைத்து பாடியிருப்பது மிகவும் அதிசயமானது. பிரம்மிப்பானது. முள் மீது துணி காய வைத்து அதனை மீண்டும் பழுது நேராமல் எடுப்பது போன்றது. தீட்சிதருடைய வித்வத்தை பாராட்ட சராசரி மனிதனால் முடியாது. அந்தப் பாராட்டுகளுக்கு எந்த அகராதியிலும் வார்த்தைகள் இல்லை.

இந்த கீர்த்தனையின் சமஷ்டி சரணத்தில்,

ஆராதயாமி ஸததம் கம்கணபதிம்

ஸெள;ஸரவணம் அம் ஆம்

ஸெள;த்ரைலோக்யம்

ஐம் க்லீம் ஸெள:

ஸர்வாஸம்

ஹ்ரீம் க்ரீம் ஸெள;

ஸமஷோபணம்

ஹைம் ஹ்க்லீம் ஹ்ஸெள:

ஸெளபாக்யம் ஹ்ஸைம்

ஹ்ஸ்க்லீம் ஹ்ஸ்ஸெள:

ஸர்வார்த்தம்

ஹ்ரீம் க்லீம்ப் லேம் ஸர்வ

ரக்ஷாம் ஹ்ரீம் ஸ்ரீம் ஸெள:

ரோக ஹரம்

ஹ்ஸ்ரைம் ஹ்ஸ்க்ல்ரீம் ஹ்ஸ்ரெள:

ஸர்வ ஸித்திம்க ஏலஹ்ரீம் ஹ

ஸகஹல ஹ்லீம் ஸகல

ஹ்ரீம் ஸ்ரீம் ஸ்ர்வானந்தம்

என ஒன்பது ஆவரண மூல மந்திரத்தையும் உள்ளடக்கிய ஒரு பாடலை அமைத்திருப்பது மிகவும் அதிசயத்தக்கது.

ஸ்ரீ முத்துசாமி தீட்சிதருடைய ஸ்ரீ கமலாம்பாள் நவாவர்ண கிருதிகளைப் பாடினால், கேட்டால் வாழ்க்கை உன்னத நிலையில் இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

– டி.கே.அச்சுதன்

நோய் தீர்க்கும் இசையெனும் மாமருந்து

மருந்துகள் அற்ற மாற்று சிகிச்சை முறைகளில், நோயாளிகளின் வலிகளைக் குறைப்பது மட்டுமின்றி அவர்களது உடல் மற்றும் மனநிலையை மிகவும் மேம்படுத்தும் அதிசயத்தக்க சிகிச்சையாக ‘இசை மருத்துவம்’ திகழ்கிறது என்று அண்மைக் கால ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

அமெரிக்காவின், கிளிவ் லாண்ட் கிளினிக்கின், ஹார்விட்ச் மையத்தின் இசை மருத்துவரான லிசா எம்.காலகெர், இந்த ஆய்வு வலி, படபடப்பு, தாழ் வழுத்தம் மற்றும் மூச்சுத் திணறல் ஆகியவை கொண்ட தீவிரமான நோயாளிகளின் நலிவு நிலையைக் குறைத்து உடல் நலனை மேம்படுத்துவதாக குறிப்பிடுகிறார். 24 முதல் 87 வயது வரையிலான 200 நோயாளிகளை ஆய்வு செய்த அவர் இவர்களில் 30 சதவீதம் பேர் இசைப் பின்னணி கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கிறார். இவர்கள் புற்றுநோய், புற்றுநோய் அறிகுறி இல்லாத கட்டிகள், பல்வேறு வலி போன்ற நோய்களால் அவதிப்பட்டு வந்தவர்கள்.

அவரது இசை சிகிச்சைக்கு முன்னும் பின்னும் சோதனைகள் நடத்தப்பட்டு 25 நிமிடங்கள் இசை மருத்துவம் அளிக்கப்பட்டதில் 80 சதவீதம் பேர் தங்களது மனநிலை மேம்பட்டதாகக் கூறியுள்ளனர்.

இசை ஓர் உலக மொழி என்பதும் அதன் பாதிப்பு அனைத்து நோயாளிகளுக்கும் மட்டுமின்றி அவர்களது குடும்பத்தினருக்கும் நல்ல பயனை அளிப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கப் புற்றுநோய் சிகிச்சை மையங்களின் தேசிய இயக்குனரான கேதரின், “இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை” என்று கூறுகிறார். “இதன் அனுபவத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது” என்று கூறும் அவர், “அது நோயாளிகளின் அங்கங்கள் உணரும் ஒரு செய்கை” என்று குறிப்பிடுகிறார்.

இசையுடன் உள்ள தொடர்பால் நோயாளிகள் தங்கள் நிலையிலிருந்து விலகி வலியை மறப்பதாகவும், இசையின் அளவைப் பொறுத்து அவர்களது மூச்சு சீராக்கப்படுவதாகவும் கேதரின் கூறுகிறார். படபடப்புள்ள நோயாளி அமைதியான இசையைக் கேட்பதன் மூலம் மனம் அந்நிலையைக் குறைக்க உதவுவதாக தனது அனுபவத்தின் அடிப்படையில் அவர் தெரிவித்துள்ளார்.

நவீன இசை சிகிச்சையை பாரம்பரிய இந்திய மருத்துவ முறைகளுடன் ஒப்பிட்டு சுமதி சுந்தர், எஸ்.சுந்தர் மற்றும் டி.வி.சாய்ராம் ஆகியோர் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளனர்.

இந்திய இசை மருத்துவத்தில் நாதோபாசனா, நாதயோகா, ஆயுர்வேதா, ராக சிகிச்சை, யோகா ஆகிய முறைகளின் முக்கியத்துவத்தை அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

யோகா மற்றும் ஆயுர்வேத சிகிச்சைகள் உலகம் முழுவதும் அறிவியல் ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் குறிப்பிடும் இவர்கள் சில பாரம்பரிய சிகிச்சை முறைகள் இசையுடன் தொடர்புள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

பிரார்த்தனைகள் மட்டுமின்றி யோகா மற்றும் தியானம் ஆகியன வாழ்வியல் முறையில் வழிகாட்டுதலாக அமைகின்றன. நோயாளியின் வலியைக் குறைக்க இசையும், ஒலியும் பெருமளவில் மாற்றுச் சூழ்நிலையை உருவாக்குகின்றன. இந்து திருவிழாக்களில் தீ மிதித்தல் என்பது ஒரு பகுதியாக

இருந்து வருகிறது. அதே போன்று தங்களது உடல், கன்னங்கள் மற்றும் நாக்குகளில் அலகு குத்தி காவடி எடுத்து வரும் முறைகளும் உள்ளன.

தனது மனஉறுதி, மன ஒருமைப்பாடு மற்றும் நம்பிக்கை ஆகியன வலியை மறக்கும் நிலையை உருவாக்குவதுடன் ஒரு சொட்டு ரத்தம் கூட சிந்தப்படுவதில்லை.

முரசுகளின் ஒலியும், 'அரோகரா' என்ற முழக்கமும், பக்திப் பாடல்களும் உடல் மற்றும் மன ரீதியாக எந்த வலியையும் உணர முடியாமல் செய்து விடுகின்றன.

அதேபோன்று, 5000 ஆண்டுகள் பழமை பெற்ற வேதங்களின் பாராயணங்கள் மற்றும் சொற்களின் ஒலி உடலில் பல மாற்றங்களை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகிறது. தலைவலி, இருமல், வாயு மற்றும் பித்த சம்பந்தமான நோய்களிலிருந்து விடுபட வேத பாராயணங்கள் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

தற்கால இசை மருத்துவ சிகிச்சையில் பாடல்களை ஒன்று முதல் மூன்று இசை வடிவத்தில் சொல்வதன் மூலம் மனம் ஒரு நிலைப்படுத்தப்பட்டு ஆழ்ந்த சூழ்நிலையில் இருத்தப்படுகிறது. சிறப்புத் தேவைகள் கொண்ட குழந்தைகள் இத்தகைய விரைவான மற்றும் மாதிரி ராக வடிவங்களால் உடனடிப் பயன் பெறுகின்றனர்.

ஆயுர்வேதம் உடலை நான்கு பகுதிகளாகப் பிரிக்கிறது. வாத, பித்த, கப மற்றும் இம்மூன்றும் இணைந்த சன்னிபாதம் என்ற இந்த நான்கு தாதுக்களும் உடலில் அமைந்துள்ளதாகவும் இவை இந்திய இசை முறையில் 27 சுருதிகளை குறிப்பதாகவும் கூறப்படுகிறது. வாத, பித்த, கபம் போன்று ராகங்களும் மூன்று பிரிவுகளாக குறிக்கப்பட்டுள்ளன. ஸ்வரங்கள் உடலின் பல்வேறு ஆற்றல் மையங்களான சக்கரங்களுடன் தொடர்பு கொண்டவை. இந்த முறைகளை தனது இசை மருத்துவ சிகிச்சையில் பண்டிட் சான்க்கட்டி பயன்படுத்துகிறார்.

யோகா முறையானது, மனம், உடல் மற்றும் ஆன்மாவை சில ஆசனங்கள் மூலம் ஒன்றிணைக்கக் கூடியதாகும்.

சவாசானம் என்பது பின்னணி இசையுடன் மேற்கொள்ளப்பட்டால் கழுத்து மற்றும் தலையில் படபடப்பு உள்ள புற்றுநோயாளர்கள் சிகிச்சையின் பொழுது அமைதி நிலை அடைவதாக சுமதி சுந்தர் தெரிவிக்கிறார்.

நாதயோகா என்பது ஒலி யோகா ஆகும். இதனை ஒலிகளின் மூலம் தன்னிலை உணர்தல் எனக் கூறலாம்.

இந்த முறையில் உடலின் உட்புற ஒலிகளும், வெளிப்புறம் கேட்கப்படும் இசையும் இணைந்து செயல்படுகின்றன.

நாதோபாசனம் என்பது இசை யோகாவாகும். பண்பாடு மற்றும் பாரம்பரியம் பொருந்திய இந்திய இசையில் 'ஆன்மிகத் தொடர்பு' உள்ளதாக சுந்தர் கூறுகிறார்.

அவரது ஆய்வின்படி ஆன்மிக உணர்வுகள் இசை கேட்பவரது மனதில் அமைதியையும், நம்பிக்கையையும் தோற்றுவித்து வலியையும், படபடப்பையும் நீக்குவதாகக் கூறப்பட்டுள்ளது. புற்றுநோய் சிகிச்சையில் இந்த இசை மருத்துவமான நாதோபாசனம் போன்றவை இணைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராக சிகிச்சை மூலம் குறிப்பிட்ட ராகங்கள் குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படுவதாகக் கூறப்பட்டாலும் இது பற்றி மேலும் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டியுள்ளது.

மனநிலை குன்றிய குழந்தைகளுக்கான இசை மருத்துவம் பற்றிய பயிற்சி முறைகள் பற்றிய ஆய்வு நடத்திய சாய்ராம், அவர்களுக்கான அடிப்படை விதிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் நிலை இசையில் விரைவான வடிவம் மற்றும் முதல் நிலை இசையில் இசை வடிவம் அற்றநிலை என்று தனித்தனியாக ஒவ்வொரு நோய்க்கும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இவை அனைத்து முறைகளும் இசை மருத்துவத்தில் நோயாளிகளுக்குள்ள இசை விருப்பம், கேட்கும் முறை, அவர்களது சூழ்நிலை மற்றும் பாரம்பரிய இசையை ரசிக்கும் தன்மை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமையும் என்றும் சுமதி சுந்தர் தெரிவிக்கிறார்.

– குகன்

‘**கா**லட்சேபம்’ என்கிற ஸமஸ்கிருதச் சொல்லிற்கு ‘காலத்தை ஆட்சேபம் செய்தல்’ அதாவது, கதை சொல்லி மகிழ்ச்சியாக நேரத்தைப் போக்குவது என்பது பொருளாகும்.

தொடக்கத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் காலட்சேபம் செய்யும் போது எத்தனை மணி நேரமானாலும் மேடையில் நின்று கொண்டேதான் இசையுடன் விரிவுரையாற்றுவார்.

இடுப்பில் பட்டு பீதாம்பரம் கட்டி, உடல் முழுவதும் திருநீறும், சந்தனமும் பூசியிருப்பார். தலையில் அடர்ந்த குடுமிவைத்து அதில் பூவும் சூடியிருப்பார். ஆச்சார சீலர். புனுகு, ஜவ்வாது போன்ற வாசனைத் திரவியங்களையும் உடலில் பூசிக் கொள்வார். கையில் சிப்ளாக்கட்டைப் பின்புறமுள்ள பெஞ்சில் வாத்தியக் கோஷ்டியினர் அமர்ந்திருப்பர். சில பாடல்களுக்கு அபிநயம் பிடித்து நாட்டியமும் ஆடுவதுண்டு.

எனவே, ஹரிகதை நிகழ்த்துவதில் அவர் ஒரு சகாப்தம். இத்தகைய ஒரு விற்பன்னர் இந்த அரிய கலையில் தனக்குப் பின் ஒரு வாரிசையோ அல்லது சிஷ்யனையோ உருவாக்காமல் போய்விட்டார்.

இசையோடு இதிகாச, புராணக் கதைகளை எடுத்துச் சொல்லும் ஒரு அரிய கலை வடிவமே ஹரி கதையாகும். இது நம் நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. எனவே, இதனைச் சங்கீதத்தின் ஒரு அமைப்பாகக் கூறுவர். அக் காலங்களில் ஹரிகதா விற்பன்னர்கள் பாடிக் கொண்டே அபிநயமும் பிடிப்பார்களாம். அந்தளவிற்கு அவர்கள் பரதக் கலையிலும் நுணுக்கங்களை அறிந்து இருந்துள்ளனர்.

அதுமட்டுமின்றி தமிழ், தெலுங்கு, ஸமஸ்கிருதம், கன்னடம், மராத்தி உள்ளிட்ட பல மொழிகளில் பாண்டித்யமும், புலமையும் பெற்றிருந்தனர். இக்கலையில் ஒருவர் பேசப்பட வேண்டும் எனில் அவருக்கு லக்ஷிய லக்ஷ்ணங்களோடு கூடிய சிறந்த சங்கீத ஞானம், பரதக் கலையில் தேர்ச்சி, நல்ல மொழிப் புலமை, இயல் - இசை - நாடகம் ஆகிய முத்தமிழிலும் பரவலான அறிவு மிக முக்கியமாக நகைச்சுவை உணர்ச்சி, சந்தர்ப்ப சூழ்நிலை களோடு கருத்துக்களை கலந்து கட்டி பரிமாறும் திறன் போன்றவை முக்கியமானவைகளாக கருதப்படுகின்றன.

தஞ்சையை ஆண்ட மகாராஷ்டிர மன்னர்கள்தான் துவக்கத்தில் இந்த ஹரிகதைக்கு ஆதரவு அளித்து போற்றி வளர்த்துள்ளனர். 1860 காலகட்டத்தில் தஞ்சை சமஸ்தானத்திற்கு குவாலியரில் இருந்து மார்கர் பாவா, ராமச்சந்திர பாவா என்ற இரண்டு ஹரிகதை விற்பன்னர் கள் வருகை புரிந்தனர். தங்களது மராத்திய ஹரிகதை முறையினை தமிழ்நாட்டில் பரப்பினார்கள். கதைகளில் ஆங்காங்கே இடம் பெறும் புராணச் செய்திகளை ‘நிரூபணம்’ என்ற சிறிய பாடல்களாகச் செய்தனர்.

இவர்களது நிகழ்ச்சிகளில் ‘ஸாகீ, திண்டி, பஞ்சசாமரம், ஒலி, அஞ்சனா கீதம், கட்கா, அபங்கம், மத்த கோகிலம் போன்ற சிறிய இசை உருப்படிகள் எல்லாம் இடம்பெறும். இவை எல்லாம் தாளத்திற்குக் கட்டுப்பட்ட

காப்பாற்றப்பட வேண்டிய காலட்சேபம்

அழகான விருத்தங்களாகத் திகழ்ந்தன. வடநாட்டில் இது ‘ஹரிகீர்த்தன்’ என்ற பெயர் பெற்று இன்றும் சிறந்து விளங்குகிறது. இவற்றை நிகழ்த்தும் கலைஞர்கள் ‘கீர்த்தன்கார்’ என்று அழைக்கப்படுகின்றனர்.

மராத்திய மொழியில் அமைந்திருந்த ஹரிகதையினை தமிழில் மிக அழகாகச் செய்யத் தொடங்கியவர் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர் (1847-1907) என்பவர். இவர் மராத்திய முறையைப் பயின்று அதனை தமிழ்நாட்டிற்கு ஏற்ப எளிமைப்படுத்தி வழங்கினார். இதனால் இவர் ‘நவீன ஹரிகதையின் தந்தை’ எனப் போற்றப்படுகிறார்.

கிருஷ்ண பாகவதரின் நிகழ்ச்சியில் ஸ்ருதியும், நாதமும், லயமும் மிகவும் சிறப்பாக இருக்குமாம். அக்காலத்தில் சிறந்து விளங்கிய மிருதங்க வித்வான் நாராயணசாமி அப்பா போன்றவர்கள் கூட இவரது ஹரிகதைக்கு மிருதங்கம் வாசித்துள்ளனர்.

கோபால கிருஷ்ண பாரதியார் தனது ‘நந்தனார் சரித்திரம்’, ‘திரு நீலகண்ட நாயனார் சரித்திரம்’, ‘இயற்பகையார் சரித்திரம்’ போன்ற புராணக் கதைகளை எல்லாம் கதாகாலட்சேபம் செய்யக் கூடிய வகையில் அழகான நிரூபணங்களாகச் செய்து இருந்தார். அவ்வகையில் முதன் முறையாக நந்தனார் சரித்திரத்தை கதாகாலட்சேபமாகச் செய்து அதற்குப் பெருமையினைத் தேடித்தந்தவர் நமது தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரே.

இந்த சம்பிரதாயத்தை ஒட்டியே தலை சிறந்த ஹரிகதை மேதைகளாக மகாவைத்தியநாத பாகவதர், தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர், ஹரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர், பழனி சுப்ரமணிய பாகவதர், சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர், ஸ்ரீரங்கம் சடகோபாலச்சாரியார், மாயூரம் ராமஸ்வாமி பாகவதர், திருவிடைமருதூர் கிருஷ்ண பாகவதர், ஆவுடையார் கோயில் ஹரிஹர பாகவதர், திருவையாறு அண்ணாசாமி பாகவதர், தஞ்சை நாகராஜ பாகவதர் போன்றவர்கள் ஹரிகதை நிகழ்த்தி அக்காலங்களில் மிகவும் பிரபலமாக வாழ்ந்தனர்.

இந்த மகாமேதைகளின் ஹரிகதை கச்சேரிகளில் பெரும் புகழ்படைத்த மிருதங்க வித்வான்கள் எல்லாம் கூட மிருதங்கம் வாசித்துள்ளனர். தஞ்சாவூர் நாராணயசாமி அப்பா, தாஸ் ஸ்வாமி, வைத்தியநாத ஐயர், பக்கிரிப் பிள்ளை, புதுக்கோட்டை தஷிணாமூர்த்திப் பிள்ளை, அழக நம்பியாப் பிள்ளை, உமையாள்புரம் கோதண்டராம ஐயர், குற்றாலம் குப்புசாமிப் பிள்ளை, ரங்கு ஐயங்கார், பாலக்காடு மணி ஐயர் போன்ற லய மேதைகள் எல்லாம் ஹரிகதைக்கு மிருதங்கம் வாசித்துள்ளனர். எம்பார் விஜயராகவாச்சாரியின் கதைகளுக்கு டி.கே.மூர்த்தி, குற்றாலம் விசுவநாத ஐயர்,

சூலமங்கலம் வைத்யநாத பாகவதர்

முத்தையா பாகவதர்

உமையாள்புரம் சிவராமன் போன்ற மேதைகள் மிருதங்கம் வாசித்துள்ளனர். எனவே, சமீப காலம் வரை ஹரிகதை கலை நம்மவர்களால் உயர்நிலையில் வைத்தே போற்றப்பட்டு வந்துள்ளது.

ஹரிகதைக்கு இசை ஆர்வலர்கள் மத்தியில் இருந்த மதிப்பின் காரணமாகத்தான் முன்னணியில் இருந்த சங்கீத வித்வான்கள் கூட அக்காலத்தில் ஹரிகதைக்கு முன் வந்தார்கள். குறிப்பாக, மகாவைத்தியநாத ஐயர், பாலக்காடு அனந்தராம

பாகவதர், கல்லிடைக் குறிச்சி வேதாந்த பாகவதர், கீர்த்தனாச்சாரியார், சென்னை சி.ஆர்.ஸ்ரீனிவாச ஐயங்கார் போன்றவர்கள் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாகும். அக் காலங்களில் இவர்களின் கச்சேரியை ஏற்பாடு செய்பவர்கள் முதல்நாள் சங்கீதக் கச்சேரியும் மறுநாள் ஹரிகதை நிகழ்ச்சியும் செய்யுமாறு வேண்டி அழைப்பார்களாம்.

சரஸ்வதி பாய்

இத்தகைய தலைசிறந்த ஹரிகதையில் பெண்களும் ஆண்களுக்குச் சரி நிகராகவே திகழ்ந்துள்ளனர். அவர்களில் திருமதி.சரஸ்வதி பாய், பத்மாஸினிபாய், திருக்கோகர்ணம் கனகாம்புஜம், பனிபாய் போன்ற ஹரிகதா விதூஷிகள் குறிப்பிடத் தகுந்தவர்களாகும். இக் கலையில் உயர்வான சங்கீதம், நல்ல சாஸ்திர ஞானம், நாட்டு நடப்புகள், பன் மொழிப் புலமை எல்லாவற்றிற்கும் இடம் உண்டு.

ஹரிகதையில் இடம்பெறும் நிரூபணங்கள் எல்லாம் சிறிய பாடல்களாகவே இருக்கும். இதில் பல்லவி, அனுபல்லவி என இரு பிரிவே உண்டு. சிற் சில பாடல்களில் மட்டுமே சரணம் என்ற மூன்றாவது பிரிவும் அமையும். இவற்றில் சங்கதிகள் போட்டுப் பாடுவதில்லை என்றாலும் கவர்ச்சியாக இசை அமைக்கப்பட்டு இருக்கும்.

கதையின் துவக்கத்தில் நாமாவளியும் பின்பு ஐந்து பாடல்களாக அமைக்கப்பெற்ற பஞ்சபதியும் பாடப்படும். பின்பு கதையின் முக்கிய அம்சமாகிய பிரதமபதம் பாடப்படும். தொடர்ந்து கீர்த்தனை, சுலோகம், விருத்தம், பத்யம், அஷ்டபதி, தரங்கம், சூர்ணிகை, தாண்டகம், தேவர்நாமா, தேவாரம், திருவாசகம், திருப்புகழ், தில்லானா என்று பல இசை வகைகளைப் பாடி இறுதியில் மங்கலம், புண்டரிகம் பாடி முடிப்பது வழக்கமாகும். இவற்றில் உரிதாளம், ஏழு அடி தாளம் போன்றவை இடம் பெறும்.

உபகதைகளின் பொழுது கிண்டலாகச் சில நையாண்டிப் பாடல்களையும் பாடுவதுண்டு. கதைகளில் பாம்பாட்டி வரும் இடமாக இருந்தால் அவ்விடங்களில் பாம்பாட்டி பாடல்கள் வரும். தெம்மாங்கு, லாவணிப் பாடல்களும் இடம் பெறுவதுண்டு. அப்படிப்பட்ட பாடல்களை நந்தனார் கதைகளில்தான் அதிகம் கேட்க முடியும்.

பொதுவாக, ஹரிகதை வித்வான்கள் தெய்வீகத்திற்கோ, ஸனாதன தர்மத்திற்கோ, பழைய பண்பாடுகளுக்கோ எந்த விதத் தீங்கும் செய்யக்கூடாது என்பது பொது விதியாகும். அவர்கள் சிறந்த ஒழுக்க சீலர்களாகவும், கற்பனைவளம், எல்லை மீறாத நகைச்சுவை, கதையாளுமை போன்ற நற்குணங்களைப் பெற்றிருக்க வேண்டும். அதனால் தான் கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஒரு பேட்டியின் போது இப்படிக் கூறியுள்ளார்; “என்னைப் போலவே பிரசங்கம் செய்ய ஆள் கிடைப்பார்கள். அப்படியானவர் களைத் தயாரித்து விடலாம். அவர்கள் அன்றாடம் பூஜைகள் செய்ய முன் வர வேண்டுமே” என்கிற ஐயத்தை எழுப்பினார்.

தினந்தோறும் இறைவனை உளமாற வழிபட்டு பூஜைகள் செய்யாத ஆன்மீகச் சொற்பொழிவாளர்களைத் தனக்கு வாரிசாக உருவாக்குவதை வாரியார் சுவாமிகள் விரும்பவில்லை போலும். எனவே பக்தி உள்ளம் கொண்ட உபன்யாசகர்களால் மட்டுமே தன் பிறவியையும் மேம்படுத்தி தனது பிரசங்கத்தை கேட்பவர்களது ஆன்மாவையும் நெறிப்படுத்த முடியும். அதனை விடுத்து அரங்கில் அமர்ந்திருப்பவர் களை சினிமாக்காரர்கள் போல சந்தோஷப்படுத்தி வெளியேற்ற நினைத்தால் அதற்கு ‘ஹரிகதை’ என்கிற வடிவம் பொருத்தப்படாது.

– சேதுபதி

With best compliments

SRI. V.NARAYANA IYER MEMORIAL TRUST (REGD.)

SMT. THANKAM KRISHNAN MEMORIAL TRUST (REGD.)

NARAYANA VISHWANATH

Chairman

'Gitalaya' AD-48, AD-Block,
1st Street, Anna Nagar, Chennai – 600 040.
Phone : 044-26212454 / 26214524
E-mail : nvishwat@gmail.com

Guru Smt. Sailaja

Known for her strict adherence to tradition while creating her own individuality, Sailaja is an established dancer of Bharatanatyam and Kuchipudi. She constantly defines and expands the boundaries of these two art forms with her impeccable approach and rich interpretations. Intrinsic vivid expressions, pristine footwork, and gazelle-like grace define the art form of Sailaja.

Having been trained under legendary doyens of Indian classical dance, Kalaimamani K.J. Sarasa and Padma Bhushan Dr. Vempati Chinna Satyam, her incandescent passion for the art forms has not only blossomed her into an artist of finesse and grace, but has also emerged her as a dedicated exponent in the art fields. During her multifaceted career as a dancer, she has been a student, a performer, an innovative choreographer, a teacher, a cultural ambassador, and torchbearer of two iconic styles—the Vazhuvoor Bani of Bharatanatyam, and the Vempati style of Kuchipudi.

Recipient of several prestigious awards and an internationally acclaimed artist, she is a globetrotter having delivered over 1,000 live performances. Being a doyenne in the field of Kuchipudi, she was honoured with the Lifetime Achievement Award from Bharatiya Vidya Bhavan in recognition of her outstanding contribution and dedication to the art form. She is an accredited "A" grade performer for Doordarshan, and also a senior empaneled artist at ICCR, New Delhi.

Widely acclaimed by critics and connoisseurs as a creative artist whose work reveals the infinite spaces within the traditional form, Sailaja bases her dance on the principle that Kuchipudi is a dynamic, evocative language, where the dancer who has mastered and internalized the idiom can create her own dance poetry—poetry that can never be recreated through words. The latest jewel in her crown is that she has been conferred with the prestigious Sangeet Natak Akademi award for the year 2021 for her tremendous contribution and accomplishments in Kuchipudi.